557

53-7

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலா நிலயம்.

V.7. No. 30. 2.8.1934.

JL
m211,N28kN
N34.7.30.
199180

53-7

KALANILAYAM                                        தனிப்பிரதி விலை அணா 0-2-6.

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 7.]        1934 ௵ ஆகஸ்ட் ௴ 2உ        [No. 30

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 465
2. தமிழ்ப் பாடம்—
நைடதம்—நளன் தூதுப் படலம். 467
3. காலம்—நாள்
வித்வான் K. S. விசுவநாதசாஸ்திரி P.O L. 469
4. நம்மாழ்வார் வைபவம் (6-ம் பத்து, 9-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B. A. B.L. 470
5. இரவொன்றிற் பல பிழைகள்
Goldsmith's—"She stoops to Conquer" 472
6. மதுரைக்கோவை—(இணங்கலர்ப் பொருத்தம், பொருண்மேற் பிரிவு, ஓதற் பிரிவு)
S. வையாபுரிப்பிள்ளை B.A. B.L. 474
7. ஸ்ரீ தியாகராஜ கீர்த்தன மணிமாலை
(எவரிதோ நேனெல்புது)
P. B. ஸ்ரீநிவாசாச்சாரியார் B.A. 476
8. கம்பராமாயணம் (வாலிவதைப் படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L 478
9. வர்த்தமானம் 480

## கலாநிலயம்

### கல்சரை யடையும் வகை 7

இரண்டிலொன்று முதலில் உறுதியா யுரைக்காமல் உழல்வதால் ஏதுபயன்! மனமொன்றெண்ண வாயொன்று சொல்லிக் கையொன்று செய்து குழம்புவதின்றியே தெருளவேண்டியயாவற்றிற்கும் முதன்மையாய் நிற்பது, பண்டைநாட்களில் இந்நாட்டினர் வாழ்க்கை, இக்காலத்தைக்காட்டிலும் எல்லாப்படியாலும் பண்பும் பயனும் பெற்று உயர்ந்திருந்ததோ மற்றெவ்வகையிலேனுந் தாழ்ந்திருந்ததோ என்னுங்கேள்விக்கு உரிய விடையேயாம். "வெள்ளைக் கேள்வி இதனிலும் வேறில்லை; இதற்கு விடையும் விளம்பவேண்டுமோ! நம் பண்டைப் பெருமை உலகறிந்ததொன்றாயிற்றே" என்னச் சோம்பாமல் ஏம்பலோடு இயம்பி, "செல்வக்களஞ்சியம், இன்பக்கடல், கல்விமலை, கற்பின் வைப்பு, சுதந்திரச் சுவர்க்கம், இந்நாடு" என வாய்க்கு வாய் இட்ட பிச்சையாய்க் கட்டுரைத்துத் தொடர்வதெல்லாம் பெரும்பான்மை, இழிகுணமுடையோர் வளர்க்கும் வம்பிற்கும் வாதத்திற்கும் உதவுகின்றனவேயன்றி, உண்மையை உணர்ந்து அதன்படியே ஒழுகும்பொருட்டு உரைக்கப்பெறும் மாற்றங்களாவது அருமை. ஏனெனில், இப் பெருமையை இயம்பிய வாய்மூடும்முன்னரே, அப்பெருமைகளுக்குக்காரணமாயிருந்த முறைகள் யாவற்றையும் கைகடக்கவிட்டுவிட்டு நேரெதிரான முறைகளை மேற்கொள்ளுமாறு அதே மூச்சில் மொழிகின்றனரே! மாங்கனி மிகவும் இனிமையானது......ஆகையால் இருக்கின்ற மாமரங்களை யெல்லாம் வெட்டி யெறிந்துவிட்டு, நெருஞ்சியும் எருக்கும் விதைத்திடுங்கள்" என்று உரைக்கும் ஓர்பேறறிவினும் வேறன்று அன்னார் அறையும்நெறி. இந்த விபரிதம் எல்லாத்துறைகளிலும் கலங்கிக்கிடக்கின்றதேனும் கல்வியின் திறத்தில் வெளிப்படையாய் எளிதிற் காணும்படி இந்நாள் நிகழ்ந்துவருகின்றது. "முன்னைக்காலத்தில் ஆண் பெண் அடங்கலும் அளவிறந்த கல்வியை உடையவரா யிருந்தனர்: அஃதன்றோ அந்நாள்நலமனைத்திற்கும்காரணம்'! என்றுஇயம்புவரேனும், "எந்தக் கல்வியை அவர் எம்முறையிற் கற்றனர்" என்பதுபற்றிச் சிந்திக்கவேண்டும் என்ற எண்ணமே எழுகின்றதில்லை. அக்காலம், யாவரும் காவிய நாடக அலங்காரங்கள் கற்றனர்; தர்க்க வியாகரண மீமாம்ஸங்கள் பயின்றனர்; புராண இதிகாசங்களைக் கருதிஓதினர்; தர்மசாஸ்திரங்கள் வேதசாஸ்திரங்கள் ஆய்ந்தனர்; தத்துவசாஸ்திரங்களில் தேர்ச்சியுற்றனர். இவைகளையுமே இவைகளின் சார்புநின்று உதவுகின்றவைகளையுமேகற்றற்குரியகல்வியென்று கருதிக்கடைபிடித்தனர் அக்காலத்தவர். பண்டைக்காலப்பெருமையைக் காட்டிக்காட்டி அப்பெருமைஅவர்களுக்கு வாய்க்கக்காரணமாயிருந்தது 'கல்வி' என்பதையும் சொல்லிக்கொண்டே, இக்காலத்திலும் கல்வி வேண்டுமென அரசாங்கத்தையும் பொதுஸ்தாபனங்களையும் ஏனைய தனவந்தர்களையும் கூவிக்கூவிக் கூக்குரலிட்டு, "ஆரம்பக்கல்வி கட்டாயக்கல்வி, ஆண் கல்வி, பெண் கல்வி" என்னும் பலசாதிக்கல்விகளுக்குஆரவாரம்செய்வோர் எவரும் அந்நாட் பெருமைக்கு ஆதாரமாயிருந்த கல்

விபைக்கற்கவேண்டுமென்றேனும் கற்பிக்கவேண்டுமென்றேனும் முயல்கின்றனரென உரைப்பதற்கில்லையே. அதுவுமன்றி, இவைகளைக்கற்பிப்பது வீணென்றும், கற்பித்தால் நமது அருமைப்பிள்ளைகள் சக்தி செத்தவர்களாகி விடுவாரென்றும், முதலையே மறுத்து, "உபயோகமானவைகளையே எளிய முறையில், 'முன்னேற்ற' மடைந்துள்ள மற்றநாடுகளைப்போல் நாமும் கற்பிக்க" வேண்டுமென்றும் கழறுவார் கூற்றை என்னென்று எண்ணுவது! நாமிங்கு இதுகாறும் வகுத்துக்காட்டிய இலக்கணத்திற் கிணங்கும் கல்சர் வளர்வதற்குரிய சாதனங்களையே முன்னோர் கல்வியென்று கருதினாராக, இக்காலத்தவர்கள் வாய்த்தொழிலையும் கைத்தொழிலையும் கல்வியென்ற பேரினால் கூவிக்கூவி வேழமுண்ட விளங்கனிகளை விற்றுவருகின்றனரே. கல்சர் வளர்ந்து, தெய்வசிந்தனை தருமசிந்தனை பகுத்தறிவு முதலிய நன்மைகள் தழைத்ததனால் அக்கால வாழ்க்கை அன்பு மருளுமுடைய நீரும்நிழலும் பெற்றுத் திகழ்ந்தது. சான்றோர் பலர் இருந்தனர்; யாண்டும் இடும்பை இல. அன்பைக்களைந்து அறத்தை வேர் கல்லி 'நான்நான்' எனவே ஓயாமல் தருக்கித்திரியும் வகையே கற்பிக்கின்ற பாடங்களால், தொழில்களால் தனதாய வர்த்தக முறைகளால், நமது கலாசாலைகள் செய்துவருகின்ற கருமத்தைக் கண்கூடாகப் பார்த்து இருக்கின்றோமே. நம் தெய்வசிந்தனையெல்லாம்பணம் எனும் பேயின் நினைவாக முடிகின்றது; தருமசிந்தனையெல்லாம், எப்படியாவது 'முன்னுக்கு' வரவேண்டும் என்ற கொள்கையாக மாறுகின்றது; பகுத்தறிவெல்லாம் பத்திரிகைகள் புகுத்து மறிவே.

கற்பிக்கின்ற விஷயங்கள்தான் இவ்வாறுவேறுபட்டனவென்னில், அன்னவைகளைத்தான் கற்பிக்கின்ற முறைகளும் முன்னின்று முற்றிலும் முரணுற்றிருக்கின்றன. மந்தைமந்தையாகப் பிள்ளைகளைக் கொண்டுபோய் அவர் வாழ்நாளில் பாதிவேளை பள்ளிக்கூடக் கட்டிடங்களுக்குள் அடைத்துவைத்து, கேட்டவன் கேட்டவன் கற்றவன்கற்றவன் விட்டவன்விட்டவன் என்ற முறை பண்டைநாட்களிற் கண்டறியோம். தந்தையே தன் மக்களுக்குக் கல்வியை ஆரம்பித்துத்தருவான். தன்னால் கற்பிக்க இயன்றவளவு கற்பித்தபின் தன்பிள்ளையைத்தக்கஆசிரியனிடத்தில்சேர்க்கின்றான். அவ்வாசிரியனோ வாய்க்கூலி வாத்தியார் இனத்தைச் சேர்ந்தவனல்லன். முழுதுங்கற்றவன். நற்குலத்தவன். ஒழுக்கமுடையவன். குணத்தின்மேன்மையன். பணத்தாசை பற்றுதவன். தன்னுடை மாணவன் நற்குணநற்செய்கைகளோடு தெய்வபக்தியுடையவனாகவேண்டுமென்ற ஆர்வம் மிகுந்தவன். இத்தகையவோர்உத்தமனோடு மாணவன் பெருங்காலம் நெருங்கிப்பழகுகின்றான். அவனோடு உறங்கி அவனோடு உலவிப் பிறரொடுமவன்உரையாடும்நன்மொழிகளைக்கேட்டுவளர்கிறான் மாணவன். தான் அளிக்குங்கல்விக்கு வருவாய் எதிர்பார்ப்பதில்லை ஆசிரியன்; தான் கற்குமக் கல்வியால் வருவாய் மாணவனும் எதிர்பார்ப்பதில்லை. அவனது பெற்றோர்க்கும் அந்நோக்கம்இலது. எனின், தன்னை மறுக்காதஉண்மையனைத் தன்னரும்உற்றார்பெற்றார் பெருநாட்டார் தெய்வம் இவர்களுக்குமுன் ஆளாகிநிற்கும் தூய்மையனைப்முதிர்கின்றான்அம்மாணவன். பண்டைநாள் சித்திரம் இது; இதன் பக்கத்தில் இக்கால மாணவனையும் அவனது அருமை உபாத்தியாயரையும் படம்பிடித்து இயக்கவைத்துப் பார்ப்போர் நெஞ்சம் பதைக்குமே. இனி, படிக்கின்ற புத்தகங்களிலும் இவ்வித விபரீதம் நிகழக் காணலாம். தெய்வமாக்கவிகளும் முனிவர்களும் தம் மெய்தவமுநாவா னவின்ற நூல்களல்லால் அக்காலம் ஒன்றுமோதார். இன்றைக்கு நம்பள்ளிக்கூடங்களில்,சிறுவர்க்கென்று அமைக்கின்ற பாட புஸ்தகங்களிற் பெரும்பான்மை எத்தன்மையனஎன்பதைச் சிறிதேஅறிவுடையோரும் உணர்ந்துகொள்வர். இங்குரைத்தன அவ்வளவும் ஆரம்பப் பாடசாலைமுதல் சர்வகலாசாலை யீறாக யாவற்றிற்கும் பொருந்துமென் றுரைத்தல் மிகை.

ஆதலின், வர்த்தமானப்பத்திரிகைகளைப்போலவே தற்காலக்கலாசாலைகளும் கல்சருக்கு விரோதமாகவே நடைபெறுகின்றன வென்பதை நன்குணர்ந்து, எல்லா நலங்களுக்கும் ஏற்ற சாதனமாய கல்சரை அடையும் வகை, அப் பத்திரிகைகளை மொய்ப்பதிலும் பள்ளிக்கூடத்தில் கும்பல்சேர்வதிலு மில்லையெனத்தெருட்டவேண்டியது எமதுகடமையாயிற்று. எதிர்மறையாக இவ்வளவு விளக்கியதிலிருந்து மற்றக் கல்சரை அடையும் நெறி யாதென்று ஒருவாறு தெளிந்திருக்கும். வாழ்க்கையை விற்றே வயிறுபிழைக்க வழிகூறுவோர் வாய் ஓயுமெனின் அதுவே இன்று முதலி லிவ்வுலகம் எய்தவேண்டிய பாக்கியம். கல்சரிலேயே கவனத்தைச்செலுத்தற்கு இக்கால வர்த்தகமுறைகளும் உத்தியோகவகைகளும் அரசியல்நெறிகளும்தனதாய விதிகளும் பெரிதும் இடையூறாக விருக்கின்றன என்பது உண்மையே. என்றைக்கு நம் விளைநிலங்களைக் கைவிட்டு இவைகளில் நசையுற்றோமோ அன்றைக்கே கல்சரின் கழுத்தில் கைவைத்தாய்விட்டது. எனினும் இருக்கின்ற நிலைமையை ஏற்றுக்கொண்டாலும் முற்றிலும் கையற்று நிற்கவேண்டியதில்லை. கல்சரில் நம்பிக்கையும், அதனை அடைய வேண்டும்மெனும் ஊக்கமும் உண்மையாய் உடையோமெனின் இவ்விடையூறுகளையும் பெரும்பாகம் கடந்துவிடலாம். நன்னெறி நடக்க விரும்புவோர்க்கு அருட்பெருங்கடவுளே அருகிருந்து கைதந் துதவும். தாளாண்மையுடையோர்க்கெதிர்நிற்கவல்ல இடையூறு முண்டோ.

இந்நிலையிலேயே இருந்துகொண்டும், அவரவர் இக்கல்சரைத் தாமும் எய்தி மற்றவர்களுக்கும் எய்துவிக்கும்வழி யாதென்று நாம் நினைப்பதைப் பிற்றைநாள் கூறுவதுடன் இவ்வரிசைத் தலையங்கங்களை முடிவிற்குக் கொண்டுவர லாவோம்.

ஒன்றிங்கு உரைக்கலாம். வாழ்க்கையின் நிச்சயம், அதனை வாய்மைக்கு இணங்க நடத்துதல், அவ்வாறு நடத்துவதற்குரிய வழி ஆகிய இம்மூன்றும் ஒன்றோடொன்று இணைந்து ஒருங்கே கைவரும்படி செய்யவல்லது இந்தக்கல்சரன்றி வேறொன்றுமில்லை என்று நாம் இதுகாறும் வற்புறுத்திவந்[illegible]டயங்களில் முன்னரே நல்லநம்பிக்கை [illegible] அல்லது

m211,N28km
N34.7.30
199180



இக்கட்டுரைகளினால் நம்பிக்கை தூண்டப்பெற்றவர்களும், அந்த நம்பிக்கையோடு நின்றுவிடாமல் மற்றுமோர் விடயத்தையும் மனத்துட் கொள்ளும்படி பரிவுடன் இங்கு நாம் வேண்டிக்கொள்வது இன்றியமையாததாகின்றது. கல்சர் என்னும் அது கடையில் வாங்கிக்கொள்ளத் தகுந்ததன்று. விரும்பியவுடனே வாயில்போட்டு விழுங்கும்படி ஒருவரும் கல்சரை மாத்திரைகளாக உருட்டி வைத்திருக்கவில்லை. ஆதலின், இன்றுநினைத்தோம் நாளையதினம் கல்சரை அடைந்தோம் என்னும் விரைவை இதனிடத்தில் ஒருவரும் எதிர்பார்த்தலாகாது. நாளுக்குநாள் மாதத்திற்கு மாதம் வருடத்திற்கு வருடம் வளரவேண்டியது அது. இந்த வளர்ச்சி இடையூறின்றி நிறைவேறி முதிர்வதற்கு ஓபாத முயற்சியும் உடன்வரவேண்டும். முயற்சிக்கெல்லாம் ஆதாரமாயிருப்பது, மனம் வைத்த ஒன்றில் ஊன்றிய நினைவுடன், அதனைப் பெற வேண்டும் என்று கொள்கின்ற ஊக்கமாம். ஆதலின், கல்சரை அடையவேண்டும் என்னும் இந்நோக்கத்தை வாழ்க்கையில் முதலும் முக்கியமுமாகவைத்து, இதற்கு மாறாக முரணுகின்றவைகளையெல்லாம், 'பொழுதிருந்தால் பார்த்துக்கொள்வோம்' என்னும்நிலைக்குத் தள்ளிவிடவேண்டும். அப்படிக்கின்றி மற்றவைகளையே முக்கியமாக வைத்துக் கையொழிந்தநேரம் கல்சருக்கு வருவோம் என்றால்,அதன்பயன் மிகமிகச்சிறிதாகி, இல்லையென்றே சொல்லும்படி முடிந்துவிடும். மற்றவைகளை வாழ்க்கையென்றும் அவ்வாழ்க்கைக்கு ஒருகால் இக்கல்சர் உதவியாகலாமென்றும் மதிப்பதால், கல்சரில் நம்பிக்கையுள்ளவர்களிலும் எண்ணிறந்தோர் வீண்மோசம் போகின்றனர். இந்த எண்ணம் உண்மைக்கோ நேர்மாறானது. முன் சொன்னபடி, வாய்மையும் வாழ்க்கையும் வழியும் ஆகிய இவை மூன்றும் வேறுவேறாகப் பிரியாமல், ஒன்றினோடொன்று ஒத்துவளர்கின்ற தத்துவத்தில் கல்சரின் சிறப்புக் காணப்பெறுகின்றது. கல்சரையடையவேண்டுமென்று ஓர் ஆசைகொள்வதே வாழ்க்கையின் உவகையை உணரச்செய்யும். கல்சரைப் பெறுகின்றமுயற்சியே வாழ்க்கையை வாழ்வாங்கு நடத்திவைக்கும். அவ்வாசையும் இம்முயற்சியுந் தவிர வாய்மையின் தூய்மையை வேறெங்கும் நாடிச் செல்லவும் வேண்டா.

எனின், இக்கலாநிலயத்துடன் ஒக்கநினைக்கும் உறவினர் யாம் சொல்லிவந்தனவற்றை நம்புவதோடுமட்டும் நிற்காமல், தம்மோடு பயில்கின்ற அனைவருக்கும் கல்சர்நிலை கைகூடுவதற்குரிய ஊக்கத்தையும் முயற்சியையும் உதவவேண்டுமென்பதைத் தம் முதல்நோக்கமாகக் கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

# தமிழ்ப்பாடம் 130.

## நைடதம்—நளன்தூதுப் படலம்

[453-வது பக்கத் தொடர்ச்சி]

இவனழற் கடவுண்மற் றிவன்வெங் கூற்றுவ
னுவனெறி கடற்கிறை யொழிந்து நின்றயான்
கவனவாம் பரியுள முணருங் காவல
வவிரொளி மணிமுடி யமரர் வேந்தனே. 15.

(உரை). கவன வாம் பரி - வேகத்துடன் தாவுகின்ற குதிரைகளினுடைய, உளம் உணரும் காவல - உள்ளத்தை உணர்ந்து செலுத்தும் வேந்தனே, இவன் அழல் கடவுள் - இவன் அக்னிதேவன், (மற்று-அசை) இவன் வெம் கூற்றுவன் - இவன் கொடிய எமதர்மராஜன், உவன் - மற்றவன், எறிகடல்கு இறை - எறிகின்ற அலையை உடைய கடலுக்குத் தலைவனான வருணன்; ஒழிந்து - மேலே கூறியவர்கள் தவிர, நிற்கும் யான் - நிற்கின்ற நானோவெனின், அவிர் - வீசுகின்ற, ஒளி- ஒளியினோடு கூடிய, மணிமுடி - இரத்தினங்கள் இழைத்த கிரீடத்தை உடைய, அமரர் - தேவர்களுக்கு, வேந்தனே - தலைவனான தேவேந்திரனாவேன். (என்று இந்திரன் தன்னையும் மற்றத் தேவர்களையும் அறிமுகம் செய்துவைத்தான்.)

குறிப்பு:—போகும் என்பது போம் என்றும், ஆகும் என்பது ஆம் என்றும் ஆவதுபோல் இங்கு வாவும் என்பது வாம் என இடைகுறைந்து நின்றது.

---

உன்னுழை வேண்டுவ தொன்றுண் டாங்கது
பின்னர்யாங் கூறுது மென்று பெட்புறும்
பொன்னகர்க் கிறையவ னிருந்த போதினின்
மன்னவ னவரடி வணங்கி னனரோ. 16.

(உரை). 'உன் உழை - உன்னிடத்தில், வேண்டுவது ஒன்று உண்டு - எங்களால் வேண்டப்படுவது ஒன்று இருக்கின்றது. (ஆங்கு - அசை) அது - அது என்னவென்பதை, யாம் பின்னர் கூறுதும் - நாங்கள் உனக்குப் பிறகு கூறுவோம்; என்று - என்று கூறி, பெட்பு உறும் - ஆசைமிகக் கொண்ட, பொன்நகர்க்கு இறை அவன்- பொன்னுலகத்திற்குத் தலைவனான இந்திரன், இருந்த போதினில் - காத்து இருந்தபோது, மன்னவன் - நளசக்கிரவர்த்தி, அவர் அடி வணங்கினன் - அந்த நான்கு தேவர்களுடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கினன். (அரோ - அசை).

விரிவுரை:—தேவர்களே வந்து தன்னிடத்தில் ஒரு வரம் இரக்கின்றனரே என்னும் இறுமாப்புடைய எண்ணம் சிறிதுமின்றி, 'எளியேனை வந்துஇவர் ஒன்றுகேட்கவோ' என்னும் அடக்கத்துடன் அவர் அடிகளை வணங்கிய பெருந்தகை நளன்.

குறிப்பு:—பின்னர் + யாம் = பின்னர் யாம் - நிலைமொழி இறுதியில் மெய்யெழுத்திருக்க, வருமொழி முதலில் யகரம் வரின் இகரம் தோன்றி, பின்னரியாம் எனப்புணரலாம். ஆயினும் அவ்வாறு இகரம்தோன்றாமல் பின்னர்யாம் என இயல்பிற் புணர்வது பிழையன்று.

---

உண்ணெகிழ்ந் திறைஞ்சிய வுலங்கொ டோளினன்
விண்ணுல காள்பவர்க் கரிய மேம்பொருள்
மண்ணுல காள்பவர் மாட்டு வைகுமோ
வெண்ணின்மற் றிவருளம் யாவ தாங்கொலோ. 17.

(உரை). உள் நெகிழ்ந்து - இவ்வாறுஉள்ளம் உருகி, இறைஞ்சிய - வணங்கிய, உலம் கொள் - மலையை ஒத்த, தோளினன் - தோள்களை உடைய நளமகாராஜன், விண் உலகு ஆள்பவர்க்கு - தேவலோகத்தை ஆள்கின்றவர்களுக்கு, அரிய மேம்பொருள் - அகப்படுவதற்கு அரியதான சிறந்த பொருள், மண்ணுலகு ஆள்பவர்மாட்டு - மண் உலகத்தை ஆள்பவரிடத்தில்,

வைகுமோ - இருக்குமோ! (இருப்பது இயலாதாகையால்) எண்ணில் - எண்ணுமிடத்து, (மற்று - அசை) இவர் உளம் யாவது ஆம் கொலோ - இவர்களுடைய கருத்துத்தான் யாவதாயிருக்குமோ எனக்குத் தெரியவில்லையே! (என்று நளன் தனக்குள்ளே சிந்தித்துக் கொண்டான்).

குறிப்பு:—உலம்கொள் என்பதில், கொள் என்பது இங்கு உவம உருபாக நிற்கின்றது. அல்லது, உலத்தினுடைய தன்மையைக்கொண்ட, அதாவது, உலம் போன்ற என்று பொருள்படுத்த வேண்டும்.

---

குறிப்பறிந் தீதலே கொடைமற் றின்றென
மறுத்தலே கேட்டபின் வழங்க லாதலிற்
பெறற்கரு மாவியும் பெட்பி னீகுவன்
றிறப்பட விவருளந் தெரிந்த தில்லையால். 18.

(உரை). குறிப்பு அறிந்து - மற்றவர்களுடைய குறிப்பைத்தெரிந்துகொண்டு அவர் கேட்காமுன்னம், ஈதலே - கொடுப்பதே, கொடை - கொடை எனத் தகுந்ததாகும். மற்று - அவ்வாறின்றி, கேட்டபின் வழங்கல் - கொடு என்று அவர்களே கேட்டபிறகு கொடுப்பது, இன்று என மறுத்தலே - கொடேன் என்று மறுப்பதற்கே சமானமாகும். ஆதலின் - ஆதலால், பெறற்கு அரும் ஆவியும் - பெறுவதற்கு அருமையான எனது உயிரையும், பெட்பின் ஈகுவன் - அவர்களுக்கு வேண்டியிருக்குமாயின் நான் விருப்பத்துடன் கொடுத்துவிடுவேன். (ஆனாலோ) திறம்பட - நிச்சயமாக, இவர் உளம் - இவர்களுடைய கருத்து இன்னதென்று, தெரிந்தது இல்லை - எனக்குத் தெரியவில்லையே! (ஆல் - அசை) (என்று நளன் தனக்குள் எண்ணிக்கொள்கின்றான்.)

விரிவுரை:—'இலன் என்னும் எவ்வம்உரையாமை ஈதல் குலமுடையார் கண்ணே யுள' என்னும் குறளின் கருத்தைத் தழுவிக் கொடையின் இலக்கணம் இங்குக் கூறப்பெற்றிருக்கின்றது. 'ஆவிற்கு நீரென்று இரப்பினும், நாவிற்கு இரவின் இளிவந்தது இல்' என்பது பொய்யாமொழி யாதலால், தனக்கு இது இல்லை என்னும் பரிபவச் சொல்லால் ஒருவன் மனமும் மானமும் அழிந்தபின் அவனுக்குக் கொடுத்தாலும், முன்னுற்ற பரிபவத்தில் பின்பெற்ற கொடையின் உவகையும் கரைந்து அழிந்துபோம். ஆதலினால், தலைவள்ளலாகிய இந்த நளன், கேட்டபின் ஒன்றைக் கொடுத்தல் கொடாதுமறுத்ததையே நிகர்க்கும் என்பதைத் தெளிந்திருந்தனன். இதனை, "ஈயென விரத்த லிழிந்தன்று, அதனெதிர் ஈயேனென்றல் அதனினுமிழிந்தன்று, கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று" என்று கழைதின்யானையார் (புறநானூறு 204) மறக்கலாகாச் சொன்னயம்வாய்ந்த செய்யுளால் இனிதின் பாடுகின்றார்.

அவ்வண்ணம் தேவர் கேளாமுன்னம் கொள்ளெனத் தன்னுயிரையும் கொடுப்பதற்கு இசைந்துளானாயினும் அவர்க்கு வேண்டியது யாதெனத் தெரியாமையினால் கொடையினைத் தாழ்க்கவேண்டி யிருப்பதுபற்றித்தான் மனம் வருந்துகின்றான்.

குறிப்பு:—ஆவியும். இதனில் உள்ள உம்மை உயர்வுசிறப்புப் பொருளது (வால்யூம் 5 பக்கம் 484).

ஈதலே - இதனில் உள்ள ஏகாரம் பிரிநிலைப்பொருளது. (5-443). மறுத்தலே- இதனில் உள்ள ஏகாரம் தேற்றப் பொருளது (5-443).

## இலக்கணம்

B. யகர ரகர ழகர மெய்யீறுகள் (தொடர்ச்சி)

III இவ்வீறுகளும் + இடையின மெய்களும்.

இடையின மெய்களில் யகரம் வகரம் என்னும் இரண்டுமே மொழிக்குமுதலில் வரக்கூடியன. இவ்விரண்டிற்கும் தனித்தனியாகவிதிகள்கூறவேண்டியது அவசியமாகின்றது.

(a) நிலைமொழி யிறுதியில் யகர ரகர ழகர மெய்கள் நிற்க, வருமொழி முதலில் வருகின்ற வகரமெய் எல்லாத்தொடர்களிலும் யாதும் விகாரமின்றி இயல்பாய்ப் புணரும்.

பாய் + வாங்கினன் = பாய்வாங்கினன்
நெய் + விலை = நெய்விலை
நகர் + விட்டான் = நகர்விட்டான்
நகர் + வீழ்ந்தது = நகர்வீழ்ந்தது
கூழ் + வெந்தது = கூழ்வெந்தது
ஊழ் + வினை = ஊழ்வினை

(b) நிலைமொழி யிறுதியில் ரகர மெய்யேனும் ழகர மெய்யேனும் இருக்க வருமொழிமுதல் யகரம் வருமானால் எல்லாத் தொடர்களிலும் இகரம் தோன்றி, அவ்விகரம் நிலைமொழியிறுதி மெய்யில் ஏறிப் புணரினும் புணரலாம்; அல்லது யாதும் விகாரமின்றி இயல்பாகவும் புணரலாம். இருவழியும் பிழையில்லை.

நகர் + யாது = நகரியாது, நகர்யாது
தேர் + யாப்பு = தேரியாப்பு, தேர்யாப்பு
(யாப்பு = கட்டுதல்)
ஊழ் + யாது = ஊழியாது, ஊழ்யாது
இதழ் + யாணர் = இதழியாணர், இதழ் யாணர்
(யாணர் = அழகு)

(c) நிலைமொழி யிறுதியில் தனிக்குறிலைச் சார்ந்த யகரமெய் இருக்க வருமொழி முதலில் யகரமெய் வருமாயின், எல்லாத்தொடர்களிலும் யாதும் விகாரமின்றி இயல்பாய்ப் புணரும்.

செய் + யாகம் = செய்யாகம்.
பொய் + யானை = பொய்யானை.
நெய் + யாது = நெய்யாது
மெய் + யாப்பு = மெய்யாப்பு. (யாப்பு = உறுதி)

(d) நிலைமொழி யிறுதியில் நெடிலொடுசார்ந்த யகர மெய் இருக்க வருமொழிமுதலில் யகரம் வருமானால் எல்லாத்தொடர்களிலும் அந் நிலைமொழியிறுதி யகர மெய் கெட்டுவிடும்.

நாய் + யாது = நாயாது.
(நீர்) பாய் + யமுனை = பாயமுனை
(பாய்கின்ற யமுனை).
போகாய் + யாதவ = போகாயாதவ.

குறிப்பு:—இவ்விதிகள் முன்னர்(7—428)வேறோர் சந்தர்ப்பத்தில் கூறப்பட்டிருக்கின்றன.

IV சிற்சில சொற்களுக்குரிய சிறப்புவிதி.

(1) தமிழ் என்னுஞ் சொல்லிற்குச் சிறப்புவிதி.

தமிழ் என்னுஞ் சொல்லிற்குப்பின் வருமொழி முதலில் வல்லினம் மெல்லினம் இடையினம் உயிர், ஆகிய இந்நான்கு இனத்தில் எவ்வெழுத்துவரினும், அகரச்சாரியையும் பெற்றுப் புணரும்.

தமிழ் + அரசர் = தமிழ் + அ + அரசர் = தமிழஅரசர்
(பிறகு இது உடன்படுமெய் பெற்றுத் தமிழவரசர் என ஆகும்)
தமிழ் + குலம் = தமிழ் + அ + குலம் = தமிழ + குலம்
= தமிழக்குலம்



தமிழ் + நம்பி = தமிழ் = + அ + நம்பி = தமிழநம்பி.
தமிழ் + வீரன் = தமிழ் + அ + வீரன் = தமிழ வீரன்.

குறிப்பு:—இவ்வாறு அகரச்சாரியை பெறுவதை ஆறும்வேற்றுமைத் தொகையிலும், உருப்பும்பயனும் உடன்தொக்கமற்றவேற்றுமைத்தொகைகளிலும்பண்புத்தொகையிலுமே காணலாம். நன்னூல் முதலிய இலக்கண நூல்களின் உரையின்கண், தமிழப்பிள்ளை, தமிழவரசன் முதலிய இத்தொடர்களைத் தமிழ் + பிள்ளை என்றும், தமிழ் + அரசன் என்றும் பிரித்து, அந்நிலைமொழிகள் அகரச்சாரியை பெற்றுப் புணர்ந்தனவென்று காட்டுவாரேனும், இவ்விதி சிறிது ஐயத்திற்கிடந்தருகின்றது. தமிழ் + மொழி, என்பது தமிழமொழி எனப் பண்புத்தொகையில் ஆவதில்லை, தமிழ் மொழியென்றே ஆகும். தமிழ் + இன்பம், என்பது தமிழின்பம் அல்லது தமிழின் இன்பம் என ஆறும் வேற்றுமைத் தொகையில் ஆகின்றதேயன்றி, தமிழ இன்பம் என்று ஆவதில்லை. தமிழ் + புத்தகம் = தமிழ்ப் புத்தகம் என்று ஆகுமன்றி உருபும் பயனும் உடன்தொக்க வேற்றுமைத் தொகையினும் தமிழப் புத்தகம் என ஆவதில்லை. ஆதலின், தமிழ் என்னும் இச்சொல் அந்தப்பாஷையைக் குறித்து நிற்கின்ற எவ்விடத்தும் அகரச்சாரியை பெற்றுப் புணரக் காண்கிலம். ஆதலின் மற்றொன்று கொள்ள இயலும். வணிகர் + வீதி = வணிகவீதி, அந்தணர் + கன்னி = அந்தணக் கன்னி,: என்று சாதியைக் குறித்த உயர்திணைப் பெயர்கள் ஈறு கெடுவதுபோல, 'சில விகாரமாம் உயர்திணை' என்ற விதியினுக்குஇணங்கி, தமிழர் + குடி = தமிழக்குடி என்றும், தமிழர் + அரசர் = தமிழவரசர் என்றும் புணர்ந்திருப்பினும் இருக்கலாம். அகரச்சாரியை பெற்றுப் புணர்ந்தனபோல் வழங்குகின்ற தொடர்களெல்லாம் 'தமிழர்' என்று நிலைமொழியைப் பிரிக்கக்கூடியனவாயிருக்கின்றன. தமிழப்பாடம், தமிழ்க்கல்வி, தமிழ்நயம், தமிழோதினன் என அகரச்சாரியை பெறாமல் புணரும் தொடர்களிலெல்லாம் நிலைமொழி பாஷைப் பெயராகிய "தமிழ்" என்றே இருக்கவேண்டி நேர்வதைக் காண்கின்றோம்.

(2) கீழ் என்னுஞ் சொல்லிற்குச் சிறப்புவிதி.

கீழ் என்னுஞ்சொல் நிலைமொழியாயிருக்குமாயின் வருமொழிமுதலில் நிற்கும் வல்லினமெய் மிகுந்து புணரவேண்டிய தொடர்களில் அவ்வாறு மிகுந்து புணர்வதோடு மிகாமலும் புணரலாம்:—

கீழ் + குலம் = கீழ்குலம், கீழ்க்குலம்.
கீழ் + சாதி = கீழ்சாதி, கீழ்ச்சாதி.

கீழ் என்பதன்முன் வல்லினமெய் மிகாமல் இயல்பாய்ப் புணர்வதே சிறப்புடைத்து.

---

# காலம்

[454-வது பக்கத் தொடர்ச்சி]

### நாள்.

நாளென்பதோ ரிரவும்பகலுங் கூடியவோர் காலப் பகுதியே யென்பதும் நாமறியாததொன்றன்று. இப்பொழுது நாமவ்விதமே வழங்கிக்கொண்டுமிருக்கின்றோம். அஃதாவது கதிரவனது தோற்றம் ஒன்று தொடங்கி, அவன் மறைந்து மற்றொருமுறை தோன்றும் வரையில் நாம் ஒருநா ளென்று கணக்கிடுகின்றோம். ஆனால் ஞாயிறு தோன்றுங்காலமே நாளின் தோற்றுவாயாக நாடுதோறுங் கொள்ளப்பட்டிருப்பினும் ஆங்கிலநாடு போன்ற பல்வேறு நாடுகளிலும் அக்கதிரவன் தோன்றுங் காலவேறுபாட்டைத் தழுவ நாளின் தொடக்கமும் வேறுகுமென்ற வேற்றுமை மட்டுங் கருதற் பாலதாம். தற்காலத்திய நாட்கணக்கில் அவ் வாங்கிலநாட்டவர், தலைக்கு நேராகக் கதிரவன் வருவதற்கு முன்பு முப்பதுநாழிகையும் பின்பு முப்பது நாழிகையும் ஆக அறுபது நாழிகை கூடியவொரு காலத்தினை யொருநா ளென்கின்றனர். அவர் இரவு பதினைந்து நாழிகை (பன்னிரண்டுமணி)யானவுடன் அடுத்தநாளாகக் கணக்கிடுகின்றனர். இதனை நாம் புகைவண்டிநிலையம் முதலான பல இடங்களிற் காண்கின்றோம். இத்தகைய முறை யொன்று நமது நாட்டிலு மிருக்கின்றது. பிறப்பிறப்பு, பெண்களின் பூப்புமுதலாய விடயங்களில் வாலாமைநீக்குதல் முதலிய சடங்குகளெல்லாங் கழிக்குமிடத்து நாம் இரவு பதினேழரை நாழிகைக்கு (ஒருமணிக்கு) மேற்பட்டவைகளை யெல்லாம் அடுத்தநாளில்நிகழ்ந்ததாகவே கணக்கிடுகின்றோம். ஆனாலவர் மெரிடியன் என்பதற்கு முன்னும் பின்னுமாக (A. M. - Ante meridiem P. M. - Post meridiem) முப்பது முப்பதுநாழிகை (பன்னிரண்டு பன்னிரண்டுமணி) கொண்டு அறுபதுநாழிகை-(இருபத்துநான்கு மணிநேரம்)ஒருநாள் என்பதனால் இரவு பன்னிரண்டுமணி முடிந்தவுடன் அடுத்தநாள் ஆரம்பமாகின்றது: நமக்கு அத்தகைய காரணமொன்றுமின்றி இரண்டு சந்திகளிலும் இரண்டு மூன்றேமுக்கால் நாழிகைகள் - அதாவது ஏழரை நாழிகை. போக மிகுந்துள்ள இரவை ஐந்தாக்கி அவற்றில் மூன்றுபாகம் முதல்நாளைச் சேர்ந்ததாகக்கொள்கிறோம். இக்கணக்கில் இரவு பதினேழரைநாழிகை அதாவது ஒருமணி முடிந்தவுடன் அடுத்தநாளாகக் கொள்கின்றோம். இவ்வளவே இருவருக்கும்வேற்றுமை. ஆயினும், (ஆங்கிலப் பழங்கவிகளெல்லாம் கதிரவன் தோற்றம் முதலே நாட்கணக்கிட் டிருக்கின்றனர் என்பதனை ஆங்கிலங் கற்றிருப்பவர் நன்குணர்வர். நாம்கணக்கிடுவதும் கதிரவன்தோற்றம்முதலே.

இனி,நாளென்னுஞ்சொல்லுக்குப் பொருள்தேடுமிடத்து நாள் என்பது காலை,நட்சத்திரம், தேதி,(ஓரிரவு பகல்) காலம் என்ற பலபொருள்களையுங் குறிப்பதாகக்காணப்படுகின்றது. "நாண்மோர்மாறும்' (பெரும்பாண் 160.) "நாண் ஞாயிறுற்ற செருவிற்கு வீழ்ந்தவர்" (களவழி 1.) என்றவிடங்களிற் "காலையிலேமோரை மாறுகின்ற" என்றும் "காலைப் பொழுதிலே வந்தடைந்தபோரிலே பட்டவர்"என்றும் உரையாசிரியர்கள் உரைசெய்வதும், "நாண்மகி ழிருக்கை" (புறம் 29.) "செம்மல் நாளவை யண்ணாந்து புகுதல்"(புறம் 54.) "நாள் ஆதந்து நறவு கொடை தொலைச்சி" (பெரும்பாண் 160.) "நாளிருக்கை" "நாண்மலர்" என்று பழந்தமிழ்க் கவிகள் வழங்கி இருப்பதும் நாளென்ற சொற்குக் காலைஎன்னும் பொருளுண்மை தெரிக்கும்.

மற்று "நாளுங்கோளுந் தன்னகத் தடக்கி" (மணிமே. ஆபுத்-42.) என்பது போன்ற பிரயோகங்களும்

"வியன்நாண்மீன்நெறியொழுக"(மதுரைக்காஞ்சி 6.) "நாண்மீன்விராய கோண்மீன்போல"(பட்டினப்பாலை 67.) என்பவைகளும் நாளென்னுஞ் சொற்கு நட்சத்திர மென்ற பொருளுண்மையைஉரைக்கும். இதனை நச்சினார்க்கினியருந் தமது தொல்காப்பிய உரையில் "இது நாண்மீனின் பெயர் நாளிற்குப் பெயராயினாற் போல்வதோர் ஆகு பெயர்" என்று கூறியிருப்பதும், நட்சத்திரமென்பதற்கே நாள்என்று வழங்குஞ் சேரநாட்டினரின் வழக்கும் இதனைத் தெளிவிக்கும்.

"நாளு நவைபோகான் கற்றன் மிகவினிதே" (இனியவை 4.) "என்று முளவாகு நாளு மிருசுடரும்" (நான்மணி 60.) என்பன போன்றபல தொடர்களும் "நாணாளும்" என்று நாம்வழங்குவதும் ஓரிரவும் பகலுஞ் சேர்ந்தவொரு காலத்தையும் நாள் என்னுமச் சொல் குறிக்கும் என்பது விளக்கும்.

இவையன்றிக் காலமென்று பொருளையுணர்த்துமாறு பொதுப்பெயராகவும் அச்சொல் வழங்கப்பெறுகின்றதென்பதும் "மாரிநாட் கூவுங் குயிலின் குரலின்னா"(இன்னா 2.) என்று வரும் பிரயோகங்களால் உணரலாம்.

இவ்வகைஇய பொருள்களை யுணர்த்திய நாளென்னுஞ் சொல்லானது இப்பொழுது ஓரிரவுபகல் கூடியதொருகாலம் அல்லது பொதுவகையால் ஒருஸமயம் என்ற பொருள்களில் வழங்கிவருகின்றது. இதனைக் கூர்ந்து ஆராயுமிடத்துக் காலையென்று உணர்த்தியதே அக் காலைதொடங்கிய முழு நாளையும் உணர்த்தியதென்றே அல்லது நட்சத்திரம் ஒவ்வொன்றும் ஏறத்தாழ வறுபதுநாழிகை கொண்டதாதலின் அவ்வளவினதான காலத்தையும் அப்பெயரே உணர்த்தியதென்றே கொள்ளுதல் வேண்டும்.

வடமொழியிலும் இவ்விதமே தினம்என்பது பகலையே உணர்த்துங் காரணப்பெயரேயாயினும் பிற்காலத்திலது ஓரிரவுபகலுக்குப் பெயராகமாறிஇருக்கின்றது.என்னைஎனின்,தினமணிஎன்றாற்கதிரவனென்று பொருள். அத்தினமணி என்பதும் பகலில்விளங்குபவன் என்றகாரணம்பற்றி வந்த பெயராகும். "தினே தினேஸா பரிவர்த்தமாநா" என்பதுபோன்ற விடங்களில் தினே தினேஎன்பது நாடோறும்என்றுபொருள்படுகின்றது. தினம் - இருளைப் போக்கடிப்பது என்ற பெயர் காரணத்தையுங் காண முற்கூறிய முடிவு நிலைபெறும். ஓ ரிரவுபகலை யுணர்த்துவதாக அங்கு முதலில் வழங்கியது திதி என்ற சொல்லே. அதனை நாம் தமிழில் தேதி யென்கின்றோம். சேரநாட்டார் தியதி என்கின்றனர். ஆங்கிலேயருங்கூட டேட் (date)என்கின்றனர்.

அன்றியும், திங்களின்தேய்வுவளர்ச்சிகளைப்பதினைந்துநாட்களாகக் கணக்கிட்டுவைக்கக் காலாந்தரத்தில் அப் பதினைந்துநாளென்பது மாறிச் சிற்சிலசமயங்களில் ஏற்றக்குறைச்சலைப்பெற்றது. பெறவே அந்தக் காலத்தைப் பதினைந்தாகப்பங்கிடுமிடத்து ஒவ்வொரு திதியும் நியதியாக வறுபதுநாழிகையேபெறாமல் ஏற்றக்குறைவைப்பெறவே தினம்என்பதுபோன்றசொற்களுக்கும் ஆற்றல் வளர்வதாயிற்று. இதைப்போலவே தமிழ்மொழியிலும்நாளென்றசொல் நாளடைவில்ஆற்றல் மிகுந்ததாகி இருக்கிறதென்று தோன்றுகின்றது. ஓர்இரவுபகலையே உணர்த்துவதாகப் பழந்தமிழ் நூல்களிற் காணப்படுவது வைகல் என்னுஞ் சொல்லேயாகும். "வைகலும் வைகல் வரக்கண்டும்" (நாலடி 39.) "இன்னா வைகல் வாரா முன்னே- செய்ந்நீ முன்னிய வினையே" (புறம்363.) "காமரு சுற்றமோ டொருங்குநின்னடியுறை - யாமியைந் தொன்றுபு வைகலும் பொலிகென" (பரிபாடல் 1.) "வாய்மை வயங்கிய வைகல் சிறந்த" (பரிபாடல் 1.) "வைகலும் - அங்குழைக் கீரை யடகு மிசையினும் - எங்கணவ னல்கலினிது." (புறப். வெண் - பொது 8.) என்னும் இமிடங்களிலெல்லாம் வைகலென்னுஞ்சொல் ஓ ரிரவுபகல் கூடியவொரு காலப் பகுதியினையே உணர்த்துகின்றமை காண்க. இதுவரையிற் கூறியவாற்றால் நந் தமிழ்மொழியிற் காலை அல்லது நட்சத்திரம் என்னும் பொருளில் வழங்கிவந்த நாளென்னுஞ் சொல் பிற்காலத்திலொரு நாளுக்கும் அதிலிருந்து பொதுவாக ஒரு காலப்பகுதிக்கும் பெயராக மாறியதென்று நிச்சயிக்க வேண்டி இருக்கின்றது.

---

# நம்மாழ்வார் வைபவம்

## திருவாய்மொழி

6-ம் பத்து 9-ம் தசகம்.

[456-வது பக்கத் தொடர்ச்சி]

1-ம் பாசுரம்.

*நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய் நெடுவானாய்ச்*
*சீரார் சுடர்க ளிரண்டாய்ச் சிவனா யயனாய்க்*
*கூரா ராழி வெண்சங் கேந்திக் கொடியேன்பால்*
*வாரா யொருநாள் மண்ணும் விண்ணும் மகிழவே.*

அவதாரிகை:—சென்றதசகத்தில், ஆழ்வார்பல தூதர்களைப் பகவானுக் கனுப்பித் தனக்குத் துணையின்மையையும் வேறுஆதரவுஇல்லாமையையும்பலவாறு அவனுக்குத்தெரியும்படி வற்புறுத்தினாலுமவன் வாக்காணமையினாலே பெரியஆர்த்தியுடன் அவனைத் தாமே திருநாட்டினின்றும் புறப்பட்டு வரப் பெருங் கூப்பாடாய் உச்சஸ்வரத்தில்கூப்பிட்டழைக்கின்றார். அதற்கு முன்னர் 7-ம் தசகத்தில் மரங்களு மிரங்கும் வகை "மணிவண்ணாவோ" என்று கூப்பிட்டு அழைத்ததைக்கண்டோம். சென்றதசகத்தி னிறுதிப்பாசுரத்தினில் அப்பத்தை வல்லார் ஊற்றின்கண் நுண்மணல் போல் உருகாநிற்ப ரென்றார். ஆகையால் ஆழ்வாரின் விரஹ வியஸநம் மிதமிஞ்சி அவரை ஏங்கச்செய்யவே அவர் பகவானைக் கூப்பிட்டு அழைப்பது இவ்வுலகத்தார் எல்லாவருக்கும் கர்ண கொடூரமாய் விளிப்பாடு கேட்குமாதலால் அவர்கள் அதை ஸஹிக்கமாட்டாமல் மனமுடைந்து துக்கப்படுவார்கள். மேலுலகத்திலும் ஆழ்வாரின் கூப்பாடு கேட்குமாதலால்அங்கும் அமரர்கள் மனமுறிவார்கள். "இங்ஙனே உன்சொத்துக்களும் உனது ஆளுகைக்குட்பட்டு உன்னால் இரக்ஷிக்கப்பட வேண்டியவைகளுமான ஜந்துக்கள் சங்கடப்படாமல் காக்கவேண்டியவனான பகவானே! நீ இவர்களெல்லாம் நோவுபடாமல் அவர் மனமகிழ்ச்சியடையும்படி ஒரு நாள் இவ்வுலகினில் சங்குசக்காயுதத்தோடு திவ்யஆபரணபூஷிதனாய்த் திவ்ய காந்



தியோடு உன்னுடைய அஸாதாரணமான தேஜஸுடன் மூர்த்திமானாய் எழுந்தருள வேணும்" என்று ஆழ்வார் இப்பாசுரத்தில் அபேக்ஷிக்கிறார். பிரம்மன் முதல் புல்வரையிலுள்ள உலக வஸ்துக்களிலெல்லாம் நீ உள்ளேபுகுந்து கடவுளாய் நடத்துவதையானறிவேனென்று "நீராய் - அயனாய்" என்று 8-ம் வேற்றுமையால் ஸம்போதனம் செய்கின்றார். "ஆனாய்" - ஆனவனே" என்று எப்பொழுதும் இவர் பிரார்த்தனை. இதுபோலவே வைகுண்டத்தில் பகவான் எழுந்தருளியிருக்கும் யாதொரு கலப்புமில்லாத அஸாதாரண திவ்விய மூர்த்திஸேவை ஸாதிக்கவேண்டுமென்னும் இதுவேதான் தமக்கு அபேக்ஷிதமென்று திருவாய்மொழி இறுதியிலும் 10-ம் பத்து 10-ம் தசகத்தில் 8, 9-ம் பாசுரங்களில் வற்புறுத்துகின்றார். இப்பாசுரங்களின் கருத்தை விளக்க ஆறாயிரப்படி. உரைகாரர் அருளியயுள்ள பொழிப்புரையை எடுத்து எழுதுவது பொருத்தமாகும். பகவான்கேட்பதாய்"நான் ஜகதாகாரனாயிருக்கிறஇருப்பை நீர்கண்டீராகில்இனி மற்றென்ன வபேக்ஷிதமென்னில்? ஆழ்வார் மறுமொழியாய் விண்ணப்பம் செய்கிறார்—எனக்கது அமையாது; நீ ஜகதாகாரனாயிருக்கின்ற இருப்பன்றியே இவற்றோடு கலப்பின்றித் திருநாட்டிலே நீயாயிருக்குமிருப்பைக் காணவேணு மென்கிறார்".

உரை:—நீராய் - தண்ணீராய்-எல்லா ஜந்துக்களும் தாகத்திற்குக் குடிக்க நீராய், நிலனாய் - எல்லா ஜந்துக்களும்வஸிக்கப் பூமியாய், தீயாய் - குளிர்நின்றும் காக்க அக்நியாய், காலாய் - காற்றாய், நெடுவானாய்- ஆகாசவெளியாய், சீர்ஆர் - சீர்பெற்ற, சுடர்கள் இரண்டாய் - ஸூரியசந்திரர்களாய், சிவனாய் - பரமசிவனாய், அயன்ஆனாய் - நாலு முகமுடைய பிரம்மா வானவனே,கூர்ஆர்ஆழி - கூர்மைபொருந்திய சக்காராயுத்தத்துடன், வெண்சங்கு - தவளசங்கத்தை (இவை பஞ்சாயுதங்களுக்கும் உபலக்ஷணம்) ஏந்தி - தரித்துக் கொண்டு, மண்ணும் விண்ணும் மகிழவே ஒருநாள் வாராய் -உன்னுடைய ராஜ்ஜியங்களான மண்ணுலகமும் மேல் உலகமும், அதாவது இவ்வண்டத்தில் ஜீவிக்கிற ஆத்மாக்களும் திருநாட்டிலுள்ள திவ்விய புருஷர்களும், யான்விளம்பும்துக்கஸ்வரத்தைக் கேட்டுத் துயர்பாடுபடாமல் மகிழும்படி, கொடியேன்பால் - மஹாபாவங்களை இயற்றிய நான் காணும்படி, வாராய்.

---

2-ம் பாசுரம்

*மண்ணும்விண்ணும்மகிழக்குறளாய்வலங்காட்டி*
*மண்ணும் விண்ணுங் கொண்ட மாய வம்மானே*
*நண்ணி யுனைநான் கண்டு கந்து கூத்தாட*
*நண்ணி யொருநாள் ஞாலத் தூடே நடவாயே.*

பொழிப்புரை:—ஸ்ரீவாமநனாய் உருவமெடுத்தருளி உனது பலத்தாலே (அதாவது உன்னுடைய நிரவதிக அழகாலே) சுக்ராதிகள், தானம்கொடுக்காதே கேட்பவன் மாயவன் மஹாவிஷ்ணுவென்றெச்சரித்திருந்தாலும் பலிச்சக்ரவர்த்திஉன்னுடைய ஆச்சரியவடிவத்தாலும் மழலைச்சொல்லாலேயும் மோசம்போய் உனக்குமூவடி தானஞ்செய்ய, பலியை ஓராயுதப் பிரயோகமின்றி ஜயித்துஇவ்வுலகங்களைக்கொண்டருளியது இவ்வுலகங்களில் ஜீவிக்கு மாத்மாக்களும் திருநாட்டிலுள்ள திவ்வியபுருஷர்களும் பிரீதி அடைவதற்காகவன்றோ! நான் ஸொஸ்தசித்தனாகாதபக்ஷத்தில், இவர்கள் நான்சோகத்தால் வாய்விட்டுக்கதறும் அக்நியைப்போன்ற சொற்களாலே நலிவு அடையமாட்டார்களோ? ஆகையினால் இவர்கள் க்ஷேமத்தை யடையும்பொருட்டும் துயரந்தீர்ந்துஆனந்திக்கும்பொருட்டுமாக ஒரு நாள் இவ்வுலகில் அடியே னிருக்குமிடத்திற்குவந்து நெருங்கி (நண்ணி) யான் கண்களாலேகண்டு உவந்து கூத்தாடும்படி,வாமனன் பலியின் யக்ஞத்துக்கு நடந்தெழுந்தருளினாற்போல் நடந்து வரவேண்டும்.

குறிப்பு:—இந்திரனுக்காக வேறு வேடம் பூண்டு பலியின் யச்ஞசாலைக்கு நடந்து அவனது ஸ்வயகாரியத்தை நடத்திவைத்தாற்போல், தமக்காக ஞாலத்தினுள் ஓர்நாள் ஏனோ நடந்துவர லாகாது என்ற திருவுள்ளத்தால் ஆழ்வார் யாசிக்கிறபடி. முன்செய்த வாமனாவதாரம் உலகங்களை ரக்ஷிப்பதின் நிமித்தம். இப்பொழுதும் அதுவேகாரணம்பற்றி எழுந்தருளவேணுமென்று சொல்லியபடி.

---

3-ம் பாசுரம்

*ஞாலத் தூடே நடந்து நின்றுங் கிடந்திருந்துஞ்*
*சாலப் பலநா ளுகந்தோ றுயிர்கள் காப்பானே*
*கோலத் திருமா மகளோ டுன்னைக் கூடாதே*
*சாலப் பலநா ளடியே னின்னந் தளர்வேனோ.*

அவதாரிகை:—இப்பாசுரத்தில்ஆழ்வார்,5-ம்பத்து 10-ம் தசகம் 6-ம் பாசுரம் "நின்றவாறும்" என்பதில் பகவானின் என்ன ஸம்பவங்களைத் துதிசெய்தாரோ அவைகளையே உலகங்களில் பக்தர்கள் தர்சனத்துக்காகவும் நன்மைக்காகவும் இயற்றியதாகச் சொல்லி அப்போதுள்ள பரமகாருணியன் தனக்குமாத்திரம் தர்சனம் தாராததைப்பற்றி வியஸநமடைகிறார்.

உரை:—ஞாலத்தூடேநடந்தும் நின்றும் பலநாள் உகந்தோறு உயிர்கள் காப்பானே-இந்த இரண்டடிகளுக்கும் தாத்பரியம்முதலியன சென்ற ஐந்தாம்பத்து 10-ம் தசகம் 6-ம் பாசுரத்திற்குக் கலாநிலயத்தில் வரைந்துள்ள உரையை சேர்த்துப் படிக்க அறியலாம்.

பொழிப்புரை:—"அநேக யுகங்களில் அநேக திருவவதாரங்களைப் பண்ணி உலகினர் ஸகலரும் காணும்படி மனோஹரமான திவ்விய சேஷ்டைகளைச் செய்து உலகங்களைக் காப்பாற்றி யுகந்தோறும் ரக்ஷித்தருளுகிற பரமகாருணிகனே! நீ பிராட்டியோடுகூட எழுந்தருளியிருக்கிற இருப்பையும் உன்னழகையும் உன்னுடைய திவ்விய சேஷ்டிதங்களையும் நான் ஒருவன் மட்டும் ஸர்வகாலமும் காணப்பெறாதே தளரும்இத்தனையோ" வென்கிறார்.

---

4-ம் பாசுரம்

*தளர்ந்தும் முறிந்துஞ் சகட வசுர ருடல்வேறாப்*
*பிளந்து வீயத் திருக்கா லாண்ட பெருமானே*
*கிளர்ந்த பிரமன் சிவனிந் திரன்விண் ணவர்சூழ*
*விளங்க வொருநாள் காண வாராய் விண்மீதே.*

அவதாரிகை:—இரண்டாம் பாசுரத்தில், இவ்வுலகத்தாரும் மேல் வானவரும் கண்டு சந்தோஷிக்கும்படி தனக்குத் தர்சனம்கொடுக்கப் பூமிநடுவே நடந்து வரச்சொன்ன ஆழ்வார் இப்பாசுரத்தில் முன்பு கேட்டுப்பிரார்த்தித்த விண்ணப்பம் மிகையென்று பகவானுக்குத்திருவுள்ளமாகில், உலகரும் வானவரும் மாத்திரமல்லாமல்,பிரம்மா,பரமசிவன், இந்திரன் முதலானோரெல்லோரும் என்னை உஜ்ஜீவிப்பித்து உனக்கு

கைக்காக நீ ஆகாயத்தில் வந்து ஒருநாள் தோன்றுவதை மனஸந்துஷ்டராகக் கண்டு எனக்குத் தர்சனம் கொடுக்கவேண்டும்என்று தம்வேண்டுகோளை மாற்றிப் பிரார்த்திக்கிறார்.

குறிப்புகள்:—I. கிளர்ந்த பிரமன் சிவனிந்திரன்—ஆழ்வாருக்குப் பகவானருள்புரிந்தாரேயென்ற கிளர்ச்சி - உற்சாகம்.

II. ஒருநாள் இதற்குமுன் ஆகாயத்தில் யாவரும் கண்டுவப்ப, பகவான் பிரத்தியக்ஷமாகி எந்தப் பக்தருக்காவது அருள் அளித்ததுண்டாவென்றால், கஜேந்திராழ்வான்முதலையினால் பிடிக்கப்பட்டபொழுது பகவான் அங்ஙனம் செய்தான். ஆகவே இவர் செய்யும் இப்பிரார்த்தனை மிகை அல்லவென்று திருவுள்ளம்.

விசேஷக் குறிப்பு:—சகடாஸுர வதத்தை இப்பாசுரத்தில் குறித்துச்சொல்லுவது ஏனென்றால், தமக்குப் பகவானின், தரிசனம் கிடைக்கத்தக்க தூய்மையுண்டோ? முன்செய்த தீவினைகள் இல்லையோ? அவைகள் தடுக்காவோ வென்றால், அவ்வண்ணம் பாவக்குவியல் இடையூறாக நின்றால், கண்ணன் சிறு குழவியாயிருக்கையிலே திருக்கால்கொண்டு சகடாஸுரனை உதைத்துக்கொன்றதுபோல் தன்பாவங்களையும் ஒழித்துவிட்டுத் தனக்காக ஆகாயத்தில் தோன்றக் கூடுமென்பது கருத்து.

பொழிப்புரை:—சடகாஸுரனை முன் தொலைத்தது போல் என் பாவங்களையும் வேரறமாய்த்து என்மனத் தளர்ச்சியைப் போக்குவதன் நிமித்தம் பிரம்மாமுதலானோரோடு கலந்துவந்து எல்லா நாட்டாரும் உலகரும் சந்தோஷப்பட ஆகாயமத்தியில் ஒரு நாள் தோன்றி என்னைக் காணவாராய்—என்கிறார்.

---

5-ம் பாசுரம்.

விண் மீ திருப்பாய் மலைமேல்நிற்பாய் கடல்சேர்ப்பாய்
மண்மீ துழல்வா யிவற்று ளெங்கும் மறைந் துறைவாய்
எண்மீ தியன்ற புறவண் டத்தா யெனதாவி
உள்மீ தாடி யுருக்காட் டாதே யொளிப்பாயோ.

அவதாரிகை:—இருபத்துநாலியரப்படி உரைகாரர் இந்தப்பாசுரத்திற்கு—"பகவான், முக்தர்கள் அடையும் பரம புருஷனாக நாமிருக்கப் பரமபதமல்லவோ நமக்குப்பிராப்தமும் இருப்பிடமும். நாம் அவர்களுக்கு ஸதாஸர்வகாலமும் அங்கு ஸேவை யளிக்கவேண்டியவனாயிருக்க நமக்கு அந்த ஸ்தானத்தைவிட்டு வரப்போமோ வென்ன, பரமபதந்துடங்கி யெங்கும் வஸிக்கின்ற நீ எனக்கு உன்னைக் காட்டாதிருக்கை யுக்தமோ என்கின்றார்" என்று அவதாரிகைகூறுவது வெகு பொருத்தமுள்ளது.

உரை:—விண்மீது இருப்பாய் - நித்தியஸூரிகளுக்காக வைகுண்டத்தில் வஸிக்கின்றவனே! (எட்டாம் வேற்றுமை) மலைமேல் நிற்பாய் - திருமலையில் (திருவேங்கடம்) அதுபோலவே, இவ்வுலகத்தாரு மேலுலகத்தாரும் தொழ ஸ்திரமாய் நிற்பவனே, கடல் சேர்ப்பாய் - பிரமாவுக்கும் மற்றுமுள்ள அமரர்களுக்கும் தனித் தனியாகவும் ஒன்றுகூடியும் சேர்ந்து ஸேவை ஸாதிப்பதன் காரணமாய் க்ஷீராப்தியில் சயனம்செய்கிறவனே, மண்மீது உழல்வாய் - இப்பூமியில்தானே ஸ்ரீராமன் கிருஷ்ணன் முதலான திவ்விய அவதாரங்கள் எடுத்துச் சஞ்சாரம் செய்பவனே, இவற்றுளெங்கும் மறைந்துறைவாய்-இப்படிக்குப் பெரிய உருவங்களிலும் வஸ்துக்களிலும் புகுந்திருந்தாலும் ஒருவர் காணாதே மறைந்திருப்பவனே, எண்மீது இயன்ற - ஸங்கியை கொண்டு எவ்வளவுதான் எண்ணினாலும் அதற்கும் மேல் எண்ணி முடியாமற்போகும், புறவண்டத்தாய் - இப்பூமிக்கு வெளியில் இருக்கும் அநேக (அண்டங்கள்) உலகங்களில் இருப்பவனையுமாள்வோனே! எனதாவியுள்-என் ஆத்மாக்குள், மீது ஆடி-மிகவும் நடையாடி (வஸித்து) உருக்காட்டாதே-உன் சுவரூப திவ்விய ரூபத்தை என் கண்களுக்குக் காட்டாமல், ஒளிப்பாயோ - மறைக்க கடவையோ—

---

# இரவொன்றிற் பல பிழைகள்

## [Oliver Goldsmith's—"She Stoops to Conquer"]

[458-வது பக்கத் தொடர்ச்சி]

அங்கம் 5. களம் 1.

இடம்:—ஹார்ட்காஸலின் மனையில் ஓர் அறை.

ஹேஸ்ட்டிங்ஸும் ஒரு வேலையாளும் வருகின்றனர்.

ஹேஸ்ட்:—இவ்வீட்டுக் கிழ அம்மையாருடன் நெவில்லியும் ஒரு வண்டியில் ஏறிப் போனதைப் பார்த்தாயா நீ?

வேலையாள்:—பார்த்தேன் ஐயா; வண்டி மிக வேகமாகப்போயிற்று; இவ்வீட்டுத்துரைமகனும் வண்டிக்கருகில் குதிரையிலேறிப்போனார். இதற்குள் அவர்கள் நெடுந்தூரம் கடந்திருக்கவேணும்.

ஹேஸ்ட்:—ஆயின், நானும் என் நம்பிக்கை யெல்லாம் கடந்தவனாக இருக்கிறேன்.

வேலையாள்:—ஆம் ஐயா. ஸர் சார்லஸும் (இவர் மார்லோவின் தந்தை) வந்திருக்கிறார். அவரும் இவ்வீட்டு எசமானனுமாகச் சேர்ந்து, மார்லோ பண்ணின தப்பையெல்லாஞ் சொல்லிச்சொல்லிச் சிரித்துக் கொண்டிருக்கின்றனர். இதோ, இவ்வழி வருகின்றனரே.

ஹேஸ்ட்:—எனின், அவர்கள் என்னைக் காணலாகாது. தோட்டத்தின் கோடியில் நான் காத்திருக்க வேண்டுமென்று டோனி சொன்ன நேரம் இதுதான். அதெல்லாம் இனி வீணே; ஆனாலும் போய்ப் பார்க்கிறேன்.

(போகின்றார்)

[ஸர் சார்லஸும் ஹார்ட்காஸலும் வருகின்றனர்.]

ஹார்ட்:—ஹ! ஹ! ஹா! என்ன துடுக்கான குரலில் அவன் தன் கட்டளைகளை யெல்லா மெனக்கு இட்டான் தெரியுமா!

ஸர் சார்லஸ்:—நீ அவனுடன் உறவாடிப் பேசியதையெல்லாம் உதறிவிட்டானே?

ஹார்ட்:—இருப்பினும், சாதாரண வொரு சாப்பாட்டுக்கடைக்காரனுக்கு மேலாக நான் அவன் கண்களுக்குத் தோன்றும லெப்படித்தான் போயிற்றோ!

ஸர் சார்லஸ்:—ஆம் நண்ப; ஆனால் உன்னை யொரு அசாதாரண சாப்பாட்டுக்கடைக்காரனென்று அவன் எண்ணிவிட்டான். ஹ! ஹ! ஹா!

ஹார்ட்:—நல்லது, எனக்கிப்பொழுது சுரக்கின்ற உற்சாகத்தால், என் மனம் சந்தோஷ மயமாக இருக்கிறது. வேறொன்றையும் நினைக்க இடமில்லை. எனது அருமை நண்ப, நம்மிரு குடும்பங்களுக்கும் சம்பந்தம் ஏற்படுவதால் நமதுநட்புப் பாரம்பரையாகத்தொடர்ந்து வரும். என் மகளுக்கு ஆஸ்த்தி அதிகம் இல்லாவிட்டாலும்—



ஸர் சார்லஸ்:—என்னவிது! ஆஸ்த்தியைப் பற்றிப் பேசுவானேன் என்னிடத்தில்? என் பிள்ளைக்கு நான் போதியஅளவு பொருள் சேர்த்துவைத்திருக்கிறேன். அவனுடைய இன்பத்தை உடனிருந்து அனுபவித்துப் பெருக்குவதற்குரிய உத்தமமான ஒரு மனைவியேயல்லாமல் அவனுக்கு இப்பொழுது இல்லாத தொன்றுமில்லை. நீ சொல்கிறபடி அவ்விருவருக்கும் விருப்பம் இருக்குமானால்—

ஹார்ட்:—இருக்குமானால்—என்ன ஒன்று; இருக்குமானால்! இருக்கின்றதென்றுதான் நான் சொல்கின்றேனே. என் மகளே இதனை எனக்குச் சாடையாகத் தெரிவித்திருக்கிறாள்.

ஸர் சார்லஸ்:—எனினும், கண்டவரெல்லாருந் தம்மைக் காதலிப்பதாக எண்ணிக்கொள்வது பெண்களுக்கு இயற்கையல்லவா?

ஹார்ட்:—ஆர்வமுடன் அவன் அவளது கரங்களைப்பற்றியதை நானே பார்த்தேன்; இதோ, உன் சந்தேகங்களையெல்லாம் தீர்ப்பதற்கு அவனே வருகின்றான், பார்.

[மார்லோ வருகிறான்]

மார்லோ:—நான் தங்களை விபரீதமாக நடத்தியதற்கெல்லாம் மன்னிப்புக்கேட்பதற்கு இன்னொருமுறை வந்திருக்கிறேன். இதனை நினைக்கும்போது என் மனங் கலங்கிக்கலங்கிக் கட்டழிகின்றது.

ஹார்ட்:—சீசி! இதற்கேனப்பா இத்தனைக் கலக்கம். குடிமுழுகுகின்ற காரியம் ஒன்றும் இல்லையே, ஏன் இவ்வளவு பெரிதாகப் பாராட்டுகின்றாய்? என் மகளும் நீயுமாய்க் கூடி இதனைச் சொல்லிச்சொல்லி இரண்டொருமணி நேரம் சிரிப்பீர்களானால் பின் எல்லாம் சரியாய்விடும். இதுபற்றி ஒருபோதும் அவள் விருப்பத்திற்குக் குறைவு வாராது.

மார்லோ:—அவளுடைய நன்மதிப்பை நான் எப்பொழுதும் பெருமையுடன் பாராட்டுவேன்.

ஹார்ட்:—நன்மதிப்பு என்றா சொன்னாய்! ஆர்வமில்லாத வார்த்தை யாயிற்றே அது, மார்லோ! இந்த விவகாரத்தில், நன்மதிப்பைவிடச் சிறிது அதிகமானவைகளையும் பெற்றிருக்கின்றாய் என்று எண்ணுகின்றேன்—தெரிகின்றதா?

மார்லோ:—உண்மையில், ஐய, அந்தப் பாக்கியம் எனக்கில்லை.

ஹார்ட்:—என்ன அப்பா இது, என்ன! நான் காலங் கண்டவன்; எது எது எப்படி யெப்படி என்று இளைஞனாகிய உனக்குத் தெரிந்த அளவு எனக்குந் தெரியும். உங்களிருவருக்குமிடையே என்ன நடந்திருக்கின்றதென்பதை அறிவேன் நான்; நீ மறுக்க முயல்வதாற் பயனில்லை.

மார்லோ:—என்திறத்தில் மரியாதையும் அவள் திறத்தில் அடக்கமும் தவிர எங்களிருவருக்குமிடையே யாதும் நடக்கவில்லையே. உங்களிடத்தில் நான் காட்டிய துஷ்டத்தனத்தை இக்குடும்பத்தின் மற்றவர்களிடத்திலும் செலுத்திவிட்டேன் என்று எண்ணுகிறீர்களோ!

ஹார்ட்:—துஷ்டத்தனமா! நானப்படிச் சொல்லவில்லையே. இது வெல்லாந் துஷ்டத்தன மாகுமா? தம்முடன் ஆடவர்கள் விளையாடுவதில் ஆசையுடையவர் பெண்கள். கட்டுக்கதை யொன்றும் அவள் என்னிடத்தில் சொன்னதில்லை; நிச்சயம்.

மார்லோ:—சொல்லியது எதுவாயினும், அதற்கு நான் சிறிதும் இடந் தந்ததில்லை.

ஹார்ட்:—நல்லது நல்லது! இருக்க வேண்டிய இடத்தில் அடக்கமாக இருப்பது நல்லதுதான். இருந்தாலும், இளைஞ, இதுவோ, நாடகத்தை அளவுகடந்து நடித்துவிட்டதாகும். மனதி லிருப்பதை நீ வெளிப்படையாகச் சொல்லலாம். உன் தந்தைக்கும் எனக்குமதனால் மகிழ்ச்சியே அதிகமாகும்.

மார்லோ:—என்ன சொல்வோன்—நான் மாத்திரம்—

ஹார்ட்:—உனக்குச்சொல்லத்தெரியாமற்போனால், நான் சொல்கின்றேன் கேள். உன்னைக் கண்டு அவள் வெறுக்கவில்லை; நீயும் அவளிடத்தில் விருப்பமுள்ளவனாக இருப்பதால்—

மார்லோ:—ஐயா, ஐயா, நான் சொல்வதைக் கேளுங்கள்.

ஹார்ட்:—புரோகிதனை வரவழைத்து உங்கள் இருவரையும் உடனே முடிந்துவிடுவதற்கு என்ன தடை என்று எனக்குத் தெரியவில்லை.

மார்லோ:—இருப்பினும், நான் சொல்வதைச் சற்றே கேளுங்கள், ஐயா—

ஹார்ட்:—உன் தந்தைக்கு இந்தச் சம்பந்தத்தில் சம்மதம். நானே இதனை உவக்கின்றேன். இனி, வீண் தாமதம் எதற்கு? ஆகையால்—

மார்லோ:—நான் சொல்வதை ஏன் கேட்கமாட்டேன் என்கின்றீர்! ஐய, அன்பாவது ஆர்வமாவது கொண்டிருக்கின்றேன் என்று சிறிதேனும் சந்தேகிக்கும்படியாக உங்கள் புதல்வியிடத்தில் நான் நடந்துகொள்ளவில்லையே. நாங்கள் சந்தித்தது ஒரு முறைதான்; அதனில் சுவையற்ற சில உபசாரவார்த்தைகளைப் பேசிப் பிரிந்துவிட்டோம்.

ஸர் சார்லஸ்:—நீ அவள் கையைப் பற்றியதுமில்லை; ஆர்வமொழிகள் பேசியதுமில்லை.

மார்லோ:—கடவுள் சாக்ஷியாக, உங்கள் கட்டளைக்கிணங்கி நான் இங்குவந்தேன், ஆர்வம் ஒன்றுமின்றி நான் இவர் புதல்வியைப் பார்த்தேன், பரிவு ஒன்றுமின்றிப் பிரிந்தேன். என் வார்த்தையை நம்பாமல் இதற்கு வேறோர் சாக்ஷி வேண்டுவது அழகல்ல. இத்தனை அவமானங்களுக்கு இடமாயிருக்கின்ற இவ்வீட்டைவிட்டு நான் போவதற்குத் தடைசெய்யமாட்டீரென்றும் எண்ணுகிறேன்.

[போகிறான்]

ஸர் சார்லஸ்:—தான் பேசியதவ்வளவும் மெய்யே போல் வற்புறுத்திச் செல்கின்ற இவன் செய்கை ஆச்சரியமா யிருக்கின்றது.

ஹார்ட்:—அவன் நெஞ்சுத் துணிவையும் நிச்சய வார்த்தையும் பார்க்கும்போது எனக்குந்தான் ஆச்சரியமாக இருக்கின்றது.

ஸர் சார்லஸ்:—என் உயிர்மேல் ஆணை, அவன் உரைத்ததவ்வளவும் உண்மையே.

ஹார்ட்:—இதோ வருகின்றாள் என்பெண். என்னுடைய இன்பத்தையெல்லாம் அவள் வாய்மொழியின் உண்மைக்குப் பணையமாய் வைக்கின்றேன் நான்.

[காதெரின் வருகிறாள்]

ஹார்ட்:—குழந்தாய், காதேரின், இங்கு வா. கோணுமல்காணுமல் நாங்கள் கேட்பதற்குப் பதிற்சொல். உன்னிடந் தான் அன்புங் காதலுங் கொண்டிருப்பதாக மார்லோ பேசியதுண்டோ?

காதேரின்:—திடீரென்று இப்படிக் கேட்டால் என்னவென்று சொல்வேன். ஆயினும், உண்மையை உரைக்கவேண்டுமென்று எனக்கு உத்திரவிட்டிருக்கிறபடியால், அவர் அப்படிப் பேசிய துண்டென்று தான் நினைக்கிறேன்.

ஹார்ட்:—(ஸர்சார்லஸ்ஸைப்பார்த்து)பார்த்தாயா.

ஸர் சார்லஸ்:—இருக்கட்டும் அம்மா, இது சொல் நீயும் என்மகனும் ஒருமுறைக்குமேல் சந்தித்ததுண்டோ?

காதேரின்:—ஆம், ஐய, பலமுறை.

ஹார்ட்:—(ஸர்சார்லஸ்ஸைப்பார்த்து)பார்த்தாயா!

ஸர் சார்லஸ்:— உன்னிடத்தில் ஆசை கொள்வதாகச் சொன்னுனே?

காதேரின்:—அதற்கு அளவில்லை என்ருர்.

ஸாசார்லஸ்:—காதலைப் பற்றி ஏதேனும் பேசியது உண்டோ?

காதேரின்:—ஐயா, அதிகம் பேசினுர்.

ஸர் சார்லஸ்:—ஆச்சரியம், ஆச்சரியம்! இத்தனையும் வெறும் உபசாரமாகத்தானே?

காதேரின்:—உபசாரமாகத்தான்.

ஹார்ட்:—இனி நண்பா, உனக்கொன்றும் சந்தேகமில்லையே?

ஸர் சார்லஸ்:—இருக்கட்டும், அவன் உன்னிடத்தில் எப்படி நடந்துகொண்டான், அம்மா?

காதேரின்:—எல்லாக் காதலரையும் போலத்தான். என் முகத்தை வருணித்தார், என்னுடைய பெருமையின் மிகுதியையும் தன்னுடைய தகுதியின்குறைவையும் பற்றி அதிகம் பேசினுர்; இதயம் இதயம் என்று பலதரம் பகன்ருர். தன் துன்பதை எடுத்துச் சொல்லி ஒரு சிறிய சொற்பொழிவு நிகழ்த்தினுர். உற்சாகம் மிகவுங் கொண்ட வொரு பாவனைகாட்டி முடித்துவிட்டார்.

ஸர் சார்லஸ்:—இப்பொழுது எல்லாம் நிச்சயமாயிற்று. மாதர்களோடுபேசும்போது அடக்கமும் ஒடுக்கமும் அதிகம் உடையவன் அவன் என்பதை நான் அறிவேன். இந்தத்துணிவும் பகட்டும் பேச்சும் அவனுக்கு ஏற்றதல்ல. இந்தச் சித்திரத்திற் குட்கார்ந்தவன் இவனல்லன் என்பதிற் சந்தேகமில்லை.

காதேரின்:—நான் சொல்வதும் உண்மையே என்பதை உங்கள் கண்முன்னே இப்பொழுதே காட்டித் தருவேனுனல், அப்பொழுது என்ன சொல்லுவீர். நீங்களும்என் தந்தையும் இந்தக் கதவிற்குப்பின் சற்று மறைந்திருப்பீர்களாயின், அவர் தன்னுடைய காதலை எனக்கு விளம்பும் ஆர்வமொழிகளை நீங்களே கேட்கலாம்.

ஸர் சார்லஸ்:—சம்மதம்.நீவர்ணிக்கிறபடியே அவன் மாத்திரம் இருக்கக் காண்பேனுனல் இன்றுடன் என் இன்பமெல்லாம் முடிந்தது.

[போகிருன்]

காதேரின்:—நான்வர்ணிக்கிறபடியே அவர் இல்லாமற்போனுல், என் இன்பம் ஒருநாளும் இனி ஆரம்பமாகாதென் றஞ்சுகின்றேன்.

[போகின்றனர்]

முதற்களம் முற்றிற்று.

---

# மதுரைக் கோவை

[457-வது பக்கத் தொடர்ச்சி]

## VII. இணங்கலர்ப் பொருத்தம்.

இணங்கலர்ப் பொருத்தப் பிரிகின்றமை தலைவன் தோழிக் குரைத்தல்

போற்று ரிருவர் பொருதடங் காதவெம்
போர்தணிவித்
தாற்று விடிலுற வாட்சியென் னும்வையை
யாறடைக்க
மாற்று லடிபடு வார்மது ரேசர்க்கு
மாறுபட்ட
கூற்று மதர்விழி யாய்குடை நீழற்
குவலயத்தே. 381.

தலைவன் பிரிந்தமை தோழி தலைவிக் குரைத்தல்

வணங்கா[ர்] வணங்க வணைகழற் கான
மகிணர்தம்பி
ணங்கா ரிணங்கு பரிசகன் ருர்தம்மை
யேத்துமன்பர்
குணங்கா தலித்திருப் பார்சொக்க நாயகர்
கூடல்வண்டின்
கணங்கா தலிக்குங் கருளள் காடவிக்
காரிகையே. 382.

பருவங்கண் டிரங்கல்

தேர்முந் துவதென்று நாமிங்க னேதவஞ்
செய்பவின்று
கார்முந் துவதென்ன கைதவ மோகழைக்
கானலில்நெற்
றார்முந்து தண்பணை சூழ்மது ராபுரிச்
சொக்கர்கைவேற்
போர்முந்து வேல்விழி யாய்நன்று காணம்
புரவலற்கே. 383.

தலைவன் வந்தமை தோழி தலைவிக்குரைத்தல்

விருந்தாய்ப் பருமணற் சேர்ந்த நாளுண்டு
வெந்துயர்க்கோர்
மருந்தாய்ப் பருந்த மகிணர்வந் தார்கடல்
வாரிவிட
மருந்தாய்க் களங்கறப் பாரால வாயி
லரிவையென்றுந்
திருந்தாய் பகைமன்னர் தம்மிலொன் றுய்வந்து
சேவிக்கவே. 384.

இணங்கலர்ப் பொருத்தம் முற்றும்.

---

## VIII. பொருண்மேற் பிரிவு.

தலைவன் பொருள்வயிற் பிரிகின்றமை தோழி தலைவிக் குரைத்தல்

கறங்காழி வையத் தளவு படாவின்பங்
காணினுமில்



லறங்கா ணினுமெவர் காண்பவ ரோவிடங்
காரடங்கா
மறங்காலும் வேற்படை யார்மது ராபுரி
வண்பொருளின்
புறங்காணு நெஞ்சத் தவரன்றி வேறு
பொலன்கொடியே. 385.

தோழி செலவழுங்குவித்தல்

பொறியா டரவம் பொறுத்தமண் ணேழும்
பொறுத்ததொங்கல்
வெறியாடு குங்குமத் தோளண்ண லேபுள்ளி
வெள்ளைநிலா
மறியாடு செங்கை மதுரைப் பிரான்பொருள்
வண்மையையன்
றறியாம லோகொடுத் தாருடல் பாதியு
மம்பிகைக்கே. 386.

தலைவன் பொருள்வயிற் பிரிந்தமை தோழி தலைவிக்குரைத்தல்

தொடைக்கடங் காத புயத்தா ரழகிய
சொக்கர்கைவேற்
கடைக்கடங் காத கயல்விழி யாயெதிர்
கண்டவன்றே
யிடைக்கடங் காத தனந்தள ராம
லிருக்கவுங்கள்
கொடைக்கடங் காத தனந்தன மானங்
குரிசிலுக்கே. 387.

மாலைப்பொழுது கண்டு வருந்தல்

திருந்தாத தொண்டு திருத்திய தேசிகத்
தெள்ளமுதாய்க்
குருந்தாய நீழல் புகுந்திருப் பார்தமிழ்க்
கூடல்விண்ணோர்
அருந்தா வமுதனை யாயன்பர் போகவு
மாருயிர்கொண்
டிருந்தா ருயிருண்ண வோவந்தி மாலை
யெதிர்ப்பட்டதே. 388.

பனிக்காலங் கண்டு வருந்தல்

துறப்பார் தொழுகழற் கால்மது ராபுரிச்
சொக்கர்நன்னாட்
டறப்பா தகமென்செய் தோநெஞ்ச மேயறத்
தோடுதம்மை
மறப்பார் மறப்பதை முன்னறி யாத
மனத்தொடும்பெண்
பிறப்பா ரொருவற்கு மோபனிக் காலம்
பெரும்பிழையே. 389.

இரவினீட்டம்

மீளா விரவி தடந்தேரு மின்னமு
மீண்டுசென்ற
கேளா மவர்வருங் காலமு மாய்நவ
நீதமல்லாற்
காளாய் விறகுவிற் பாரால வாயி
லதுவுமொரு
நாளாய் விடிவதுண் டோகங்குல் யாமம்
நடக்கெமக்கே. 390.

தலைவியைத் தோழி தேளித்தல்

வையும் பலவு மறுமழு வாளர்
மதுரையிலே
னையுங் கவலைப் படுவதென் னேவொரு
நாளிரவி
கொய்யுங் கலியுளே மான்றோர் திரிந்து
குடக்கெனினும்
பொய்யும் புகல்வதுண் டோவணங் கேநம்
புரவலரே. 391.

தலைவியைத் தலைவன் சுரத்திடை நினைதல்

நனையா ரளக நறுங்காரு முத்த
நகையுமொன்றும்
புனையாது சோபை தரும்புண்ட ரீகமும்
பொற்புயத்திற்
கனையாழி மான்புரப் பார்கடம் பாடவிக்
கள்விகொண்டு
நினையாமுன் னெஞ்சம் புகுந்தன ளாலென்
னினைவதுவே. 392.

தலைவன் சுரத்திடை நெஞ்சொடு கூறல்

மருட்பா வலரறி யாமது ரேசர்
மனங்கவலா
வருட்பா வலரொரு நால்வருக் கோதிய
வாகமத்தின்
பொருட்பா லறமுத லாகவெல் லாந்தரும்
பொன்னைவிட்டுத்
தெருட்பால தோமன மேயிடை யேயொன்று
தேடுவதே. 393.

தலைவன் றலைவிவருத்தம் நினைந்து கூறல்.

ஆலைத் துழனி யறுவால வாய
ரணிநகர்சூழ்
சோலைக் குருகினஞ் சேவலெல் லாமிருக்
குக்கங்குல்[வாய்]
வேலைக் கலவி மறவாது சேக்கை
விரும்பிச்செல்லு
மாலைப் பொழுதுகண் டாலுய்யு மோவென்
மடமயிலே. 394.

காரோடு கூறல்

முளையிட்ட முத்த முகிணகை யார்திரு
முன்பினந்தே
ருளையிட்ட வாம்பரி முன்செல்வை யோநறை
யோதியர்க்கு
வளையிட்ட சொக்கர் மதுரேசர் சுந்தர
மாறரன்று
தளையிட் டவருன்னை விட்டில ராகிற்
சலமுனிலே. 395.

தோழி தலைவிக்குப் பொருள் வரவுரைத்தல்

இற்பா லறமுந் தொலையாத வின்பமு
மெய்துவிக்கும்
பொற்பாய செல்விப் பொருளுட னேபுலம்
பூழிபட
மற்பா வியபுயத் தார்மது ரேசர்
வடித்தசங்கச்
சொற்பா வலர்புகழ்த் தோன்றல்பொற் றேர்வந்து
தோன்றியதே. 396.

தலைவன் வருத்தந் தீர்ந்து கூறல்

தோட்டுஞ் சரிகுழ லாரின்ப வாரி
துளும்புமுலை

ரூ
m211, N28KN
N34.7.31.
199180

மோட்டுந் தடம்படிந் தாடியுய்ந் தேனலை
மோதுசடைக்
காட்டிற் கமழ்கொன்றை யார்கடம் பாடவிக்
கன்னிப்பொருள்
வேட்டுச் சுடுசுரம் போய்வினை பேனுற்ற
வெவ்வழற்கே. 397.

போநன்மேற் பிரிவு முற்றும்.

---

## IX. ஓதற் பிரிவு

தலைவன் றேழிக் கோதற் பிரிவுணர்த்தல்

நாவித் தகர்சென் றிருந்தமை யாவிப
ஞடியன்று
பாவித்த சங்கப் பலகையின் கிழுமை
பார்த்திரங்குங்
காவித் தடங்கணல் லாய்கடம் பாடவிக்
கண்ணுதல்போய்ச்
சேவித்து நிற்குந் தமிழ்க்கெதி ராயென்கொல்
தேடுவதே. 398.

தோழி தலைவனொடு பிரிந்தமை தலைவிக்குரைத்தல்.

கொல்லாற் செயலறி யாக்கொடுஞ் சூலத்தர்
கூடனல்லாய்
மல்லாற்கு தோளண்ணல் வாய்மைநன் றேமுத்தர்
வாய்திறந்து
சொல்லாப் பொருளு மறமுமண் ணுளத்
துணிபொருளு
மெல்லாப் பயனுந் தருங்கல்வி யாமென்ப
தெண்ணினரே. 399.

தலைவி பிரிவாற்றமை கூறல்

மணந்தாழ் சடையர் மதுரா புரியின்
மனக்கவலை
குணந்தாவி கொள்ளை கொடும்பிரி வேகுழை
யக்குழையப்
புணர்ந்தா ருயிரிரு வர்க்குமொன் றுமென்று
பொய்மொழிந்து
தணந்தா ரையுமறி யாயிருந் தாரையென்
சாதிப்பதே. 400.

தலைவன் வந்தமை தோழி தலைவிக்குரைத்தல்

வேய்வந்த தோளி தடாதகைச் சாபம்
விடுத்தலமுக்
காய்வந் தரசிருப் பாரால வாய்முருந்
தாயரும்புந்
தூய்வந்த மூரற் றுடியிடை யாயென்ன
சோபனமோ
போய்வந்த துந்த னிறைவர்பொற் றேரும்
புரவியுமே. 401.

கலந்துழி மகிழ்தல்

வாழிப் புவனந் தொழுமது ரேசர்
வரசரணச்
சூழிக் கமலந் தொழுநெஞ்ச மேயுயிர்
தோற்கடங்கு
மூழிக் கடைசென் றுமானந்த வாரமு
தூறவின்ப
வாழிக்கு மான வருங்கல மாமிவ்
வருந்ததியே. 402.

தலைவனது உறவு நினைதல்

காழிக் கவுணியக் கன்றுண்ட பான்முலைக்
கண்ணியடிச்
சூழிக் கமலமுந் தாமணிந் தார்விண்
சுருட்டுதிரை
யாழிக் கடலமைத் தாரால வாயுறை
யத்தர்மற்றை
வாழிக் கமல மெனக்களித் தானடி
மாறிவைத்தே. 403.

ஓதற் பிரிவு முற்றும்.
கற்பு முற்றும்.

மதுரைக்கோவை முற்றிற்று.

---

# ஸ்ரீ தியாகராஜ கீர்த்தன மணிமாலை.

## IV. ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி ஸ்தோத்திரங்கள்.

[425-வது பக்கத் தொடர்ச்சி]

6. இராகம்—கோகிலப்பிரியை] [தாளம்—ஆதி

பல்லவி

எவரிதோ நேதேல்புது - நாலோனி ஜாலி (எவரிதோ)

அனுபல்லவி

கவகொனிஸதா பஜனஸேய - கார்யமுலன்னி வேருயெ (எவரிதோ)

சரணம்

கண நாது ஸேயகோரக - கடுவானருடை திரெகதா
குண மயமயாம் புதஸமீர - கோபால த்யாகராஜனுத (எவரிதோ)

பொருள்

நாலோனி ஜாலினி - என் உள்ளத்தினிலுள்ள துக்கத்தை, நேக் எவரிதோ தெல்புது - நான் யாரிடம் தெரிவிப்பேன்? கவகொனி - பாகவத சிகாமணிகளுடன் ஒன்று சேர்ந்து, ஸதா பஜன ஸேய - எப்போதும் உன்னைத் துதித்துக்கொண்டிருக்க, கார்யமுலன்னி - எல்லாக் காரியங்களும், வேருயென் - மற்றொருவகையில் முடிந்தது.

குணமய மயாம்புத ஸமீர - ஸத்வ ரஜஸ் தமஸ் என்ற முக்குணங்களினுலேற்படும் உபாதியாகிய பிராரப்தகருமமென்னும் மேகத்தைச் சிதறவடிக்கும் காற்றையொப்பவனே! கோபால - கோபாலனே! த்யாகராஜநுத - தியாகராஜனுல் ஸ்தோத்திரம் செய்யப்பட்டவனே! கணநாது ஸேயகோரக - பிள்ளையார் பிடிக்கப்போக, கடுவாநருடை திரெகதா - பெருக்குரங்காக முடிந்ததல்லவா?

[குறிப்பு:—ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமியின் சகோதரர்கள் அவர்மீது கோபமுற்று அவருடைய பூஜாவிக்ரஹங்களைக் காவேரியி லெறிந்துவிட்டகாலத்தில் பிரிவாற்றுமல் அவர் பாடிய சில கீர்த்தனங்களில் இஃது ஒன்று என்பர். இந்தக் கீர்த்தனை மானவதி என்ற இராகத்தோடு குறிப்பிடப்பட்டிருக்கின்றதாயினும், பாடுவோர்கள் கோகிலப்பிரியையில்தான் பாடுகிறார்கள். எனவே இதை அவ்வாறே ஸ்வரப்படுத்தி யெழுதியிருக்கிறேன்.]



### கோகிலப்பிரியா ராகலக்ஷணம்

இது எழுபத்திரண்டு மேளகர்த்தா ராகமுறையின்படி 11-வது கர்த்தா ராகமாகும். சுத்த ரிஷப, சாதாரண காந்தார, சதுச்ருதி தைவத காகலீ நிஷாதங்கள் ராகச் சாயா ஸ்வரங்கள். இதற்குத் தீக்ஷிதர் மதத்தில் கோகிலாரவம் என்று பெயர். இது எப்போதும் பாடத் தகுந்தது.

ஆரோஹணம்—ஸ ரி க ம ப த நி ஸ்.
அவரோஹணம்—ஸ் நி த ப ம க ரி ஸ.

### ஸ்வர ஸாஹித்யம்

ஸம்ஜ்ஞா விவரணம்

, — இது ஒரு களையைக் காட்டுகிறது.
; — இது இரண்டு களைகளைக் காட்டுகிறது.
| — இது தாளத்தின் மத்தியிலுள்ள தட்டுக்களைக் குறிப்பிடுகிறது.
|| — இது தாள ஆவர்த்த முடிவைக் காட்டுகிறது.
* — இது பாட்டுத் தொடங்கு மிடத்தைக் குறிப்பிடுகிறது.

ஸரிகம— பாட்டின் கடை எத்தக்காலத்தில் உள்ளதோ அதன் நடுவில் துரிதகால ஸங்கதி வருமிடங்களில் இவ்வாறு கீழ்க்கோடிடப்பட்டிருக்கும்.
ஸரிகம— மேற்படி ஸம்ஜ்ஞையிற் கூறப்பட்டிருக்கும் துரிதகாலத்துக்கும் துரிதமான காலத்தை இந்த இரட்டைக் கீழ்க்கோடு குறிக்கும்.
பதநி—தடித்த எழுத்தில் உள்ள ஸ்வரங்கள் கீழ் ஸ்தாயியைக் குறிப்பிடும்.
ஸ்ரீக்ம்—மேலே புள்ளியுள்ள ஸ்வரங்கள் மேல் ஸ்தாயியைக் குறிப்பிடும்.

குறிப்பு:—இக்கீர்த்தனம் மத்யம காலத்திற் பாடப்படவேண்டும்.

பல்லவி

| | | | | |
|---|---|---|---|---|
| ; ; ; | * தா நீ - ஸ்ா நீ தா | \| பா - ; ; - பா | \| மா - கா ; - மா | \|\| |
| ; ; ; | * எ வ - ரி . . | \| தோ - ; ; - நே | \| . - தெல்; - பு | \|\| |
| பா; ; | * தா நீ - ஸ்ா நீ தா | \| தநிஸ்நிதப- பா | \| மா - கா ; - மா | \|\| |
| து ; ; | * எ வ - ரி . . | \| தோ . . . . . - நே | \| . -தெல்; - பு | \|\| |
| பா; ; | * தா நீ - ஸ்நிதாபா - | \| தநிஸ்நிதப - பா | \| மா - கா ; - மா | \|\| |
| து ; ; | * எ வ - ரி . . . . - | \| தோ . . . . . - நே | \| . - தெல்; - பு | \|\| |
| பா; ; | * தநிஸ்ா- ஸ்நிதாபா - | \| தநிஸ்நிதப - பா | \| மா - பம கா- மா | \|\| |
| து ; ; | * எ . வ - ரி . . . . - | \| தோ . . . . . - நே | \| . - தெல் . .- பு | \|\| |
| பா; ; | * பாமா கா ; ரீ | \| ஸா, ரீ, - கா | \| மா பா; - மா | \|\| |
| து ; ; | * நா . லோ; . | \| . , நீ, - ஜா | \| . . ; - . | \|\| |
| பா; ; | * | | | |
| லி; ; | * (எவரிதோ) | | | |

அனுபல்லவி

| | | | | |
|---|---|---|---|---|
| ; ; ; | * பா தா நீ ஸ்ா ஸ்ா | \| ஸ்ா ; ; - ரீ | \| ஸ்ா ரீ - ஸ்ா ; | \|\| |
| ; ; ; | * க வ கொ நி ஸ | \| தா ; ; - ப | \| ஜ ன - ஸே ; | \|\| |
| ஸ்ா; ; | * பா தா நீ ஸ்ா ஸ்ா | \| ஸ்ா; ; - ரீ | \| ஸ்ா ரீ - ஸ்ா ; | \|\| |
| ய ; ; | * க வ கொ நி ஸ | \| தா ; ; - ப | \| ஜ ன - ஸே ; | \|\| |
| ஸ்நிதபாம | * பா தா நீ ஸ்ா ஸ்ா | \| ஸ்ா ; ; - ரீ | \| ஸ்ா ரீ - க்ா , | \|\| |
| யா . . . . | * க வ கொ நி ஸ | \| தா ; ; - ப | \| ஜ ன - ஸே ; | \|\| |
| க்ா ; ; | * ம்ா ; க்ா ரீ | \| ஸ்ா, ஸ்ா, ஸ்நி | \| தநிஸ்ா; - ஸ்நி | \|\| |
| ய ; ; | * கார்; ய; மு | \| லன்,னி,-வே | \| . . . ; - ரு | \|\| |
| தாபா; | * | | | |
| . யே, | * (எவரிதோ) | | | |

சரணம்

| | | | | |
|---|---|---|---|---|
| ; ; ; | * பா பா பா; மா | \| தா ; ; - பா | \| , பம கா மா | \|\| |
| ; ; ; | * க ண நா; து | \| ஸே ; ; - ய | \| ;கோ . . ர | \|\| |
| பா; ; | * பா மா கா; ரீ | \| ஸா ; ; - ஸா | \| ரீ கா; மா | \|\| |
| க ; ; | * க டு வா ; ந | \| ரு ; ; - டை | \| . தி ; ரெ | \|\| |
| பாபா; | * | | | |
| கதா; | * | | | |

"குணமய மயாம்புத.................த்யாகராஜநுத"—அனுபல்லவிபோல் பாடவேண்டும்.

---

## கலா நிலயம் முன்னைய வால்யூம்கள்.

1928, 1930, 1931, 1932, 1933 வருடத்திய வால்யூம்கள் வேண்டுவோர் உடனே பெற்றுக்கொள்வது நலம்.

வால்யூம் ஒவ்வொன்றின் விலை:—பைண்ட் செய்யாதது. ரூ. 7-8-0 ஹாப் லெதர் கிலட் பைண்ட் செய்தது. ரூ 9-0-0. தபால் அல்லது ரயில் கட்டணம் வேறு.

# கம்பராமாயணம்

## கிஷ்கிந்தாகாண்டம்—7. வாலிவதைப் படலம்

[462-வது பக்கத் தொடர்ச்சி]

கருத்தின் பெருமையைக் காரணங் குறைக்கும்.

தன் வன்மையும் தம்பியின்பால் வைத்த வன்பும் விளம்பிய வாலி, அதன்பின் மறுத்துரைக்க அஞ்சி நின்ற தாரையை விட்டகன்றான். அகன்று,

ஒல்லைச் செருவேட் டுயர்வல்புய வோங்க லும்ப
ரெல்லைக் குமப்பா லிவர்கின்ற விரண்டி னோடு
மல்லற் கிரியின் றலைவந்தனன் வாலி கீழ்பாற்
றொல்லைக் கிரியின் றலைதோற்றிய ஞாயி றென்ன

[அவ்வாலியானவன், விரைவில் போர்செய்ய விரும்பி, பூரித்து உயர்ந்து ஆகாயத்தின் எல்லைக்கும் அப்பால் மேலெழுகின்ற தன் தோள்களாகிய இரண்டு மலைகளுடனே வளப்பம் பொருந்திய அம்மலையினிடத்து, கிழக்குத்திக்கிலுள்ள பழமையான உதயகிரியின் உதிக்கின்ற சூரியனைப் போல வந்தான்]

நின்றா னெதிர்யா வருநெஞ்சு நடுங்கி யஞ்சத்
தன்றோள் வலியாற் றகைமால்வரை சாலும் வாலி
குன்றா டுவந்துற் றனன்கோ ளவுணன் குறித்த
வன்றா ணிடைத்தோன் றியமாநர சிங்க மென்ன

[வந்து, தன் தோள்களின் வலிமையால், அழகியபெரிய மலையையொத்த அவ்வாலி, கொடிய அசுரனாகிய இரணியன் குறித்துக்காட்டிய தூணில்தோன்றிய பெரியநரசிம்மமூர்த்திபோல, எதிரேகாண்கின்றயாவரும் மனம் நடுங்கி அஞ்சும்படி நின்றான்]

ஆர்க்கின்ற பின்னோன் றனைநோக்கினன் றானு மார்த்
தேர்க்கின்றவானத் துருமேறுவெறித்து வீழப் [தான்
போர்க்கின் றதெல்லா வுலகும்பொதிர் வுற்ற பூசல்
கார்க்குன் றமன்னா னிலந்தாவிய காலி னென்ன

[நின்று, ஆரவாரஞ் செய்கின்ற தன் தம்பியைப் பார்த்துத் தானும் ஆரவாரஞ் செய்தான். அதனால் அஞ்சி வியர்க்கின்ற மேகங்களிலிருந்து பேரிடிகள் திகைத்துவிழவும், அதனால் மிகுதியாக உண்டான பேரொலியானது, கரிய மலைபோன்ற திருமாலின், உலகங்களைத் தாவியளந்தபாதத்தைப்போல எல்லா உலகங்களிலும் சென்று பரவியது.]

உதயகிரியி லொருகதிரோனெனத்தோன்றி, மானுடமடங்கலென்ன வெளிப்பட்டு, உலகங்களை விழுங்கிக்கொள்ளு மொரு பேரொலி செய்து நிற்கின்றான் வாலி. மறைவிடம் புக்கிருந்த இராகவனு மன்னவன் தோற்றத்தை நோக்கினான். இந்தத் தோற்றம் இராமனது உள்ளத்தில் உண்மையான வியப்பு ஏதேனும் விளைவித்ததோ இல்லையோவென்று ஊகிப்பது எளியதன்று. படையூற்றமிலாச் சிறுவனா யிருந்தநாள், நிலக்கிரிகள் பின்தொடர மைவரை நெருப்பெரிய வந்ததெனவந்த தாடகையை நோக்கி, வெருவுதல்கிடக்க, வியந்ததும் இல்லன் இவன். மற்று அறன் அல்லவும் எய்தினால் அதனை விசுவாமித்திரன் செய்கவென்று ஏவினால் அதனைச்செய்வதன்றோ தான் அறஞ்செய்யுமாறு, என்று மெல்லமெல்ல கனின்று, ஓர் பெண்ணுடன் போர்செய்ய நேர்ந்ததொரு பழியை அம்முனிவன் தலைக்கே போக்கிவிட வல்லனாகி அமைதிவாய்ந்து நின்ற நீர்மையன். பின், திண்ணெடும்மேருவைத் திரட்டிற்றோஎனத்தக்க அச்சிவபிரான் பிடித்தநெடுஞ் சிலையைஇவன்முன் கிடத்தியபோது, அதனை, சீதைக்குச் சூட்டநீட்டிய ஏடவிழ் மாலைபோலெடுத்து, அப்படி எடுத்ததையும் அருகிருந்தவர் காணுமுன் இற்றதுகேட்கும்படி உடைத்தஉள்ளத்தினன் இவன் அந்நாள் தன் திருமுகத்திலோர் வியப்பின் செவ்வியைக் காட்டினனலன். அன்னதோர் தன்மை வாய்ந்த இவ்விராமனக்கு ஆயிரம் வாலிகள் புதியவோர் அதிசயம் ஆகமாட்டார். எனினும்,

அவ்வே லையிரா மனுமன்புடைத் தம்பிக் கைய
செவ்வே செலநோக் குதிதானவர் தேவர் நிற்க
வெவ்வேலையெம்மேகமெக்காலொடெக்காலவெந்தீ
வெவ்வே றுலகத் திவன்மேனியை மானு மென்றான்

[இப்பொழுதுஇராமனானவன், அன்புடையதன்னுடைய தம்பி இலக்குவனைநோக்கி, "நன்றாக உன் கண்களைச் செலுத்திப்பார், அசுரர்களுந் தேவர்களுங்கிடக்க, உலகத்தில் தனித்தனி இருக்கும்எந்தக்கடலும் எந்தமேகமும்எந்தக் காற்றும் வெப்பமுடைய எந்தக்காலாக்கினியும் இந்த வாலியன் உடம்பை ஒக்கும்", —என்றான்]

இராமன் தான்கொண்ட வியப்பினை இலக்குவனுடன் பகிர்ந்துகொள்ள வாலியைக்காட்டி இது கூறினானென்ன வெண்ணுவதுஇயற்கையேயாயினும், நிகழ்கின்றநாடகத்தை நினைக்குங்கால் வேறோர்கருத்துக் கைவருகின்றது. வாலியைக் கண்ணுற்றவுடன் இராமபிரான், இக்காட்சியை அருகிருந்த தன்தம்பி எவ்வண்ணம் ஏற்றுக்கொள்கின்றானென்பதனை யறியவிரும்பி அவன்முகம் நோக்குதலும், அம்முகம் அருவருப்புமீதூர வேறோர்புறம் திரும்பியிருக்கக் கண்டனன். இங்கிதமறியுந் திறமையி லினையிலாததென வான்மீக முனிவரால் புகழப்பெற்ற அக்கோசலத்தின் குரிசில், இளையோன் மனம் இதற் கிணங்கியதில்லை என்பதை, திரும்பிய அவன் முகத்தினின்று தேர்ந்துகொள்ளல் அருமையன்று. "யானொன்றில் சித்தம் வைக்க, அதற்கு மாறுபட முரணுவானோ இவனொருவன் என் தம்பி" என்னத்துளங்கியது இராமனது திருவுள்ளம். தன்பால் இழைத்த எத்தீங்கையும் எளிதில் பொறுக்கின்ற இராகவன், தன் சித்தத்தின் செம்மையை அயிர்ப்பாரைப் பொறுத்தலோ எக்காலுமில்லை. ஆதலின் இவ்விளவல் இன்றிங்கு இராமனது பரிவுடைய பரிகசத்திற்கு இலக்காகி நிற்கநேர்கின்றான். அன்னவனைச் சிறிது வம்பிற்கிழுத்த, தன்னொடு மாறுபட்டுத் தப்புவதன் அருமையை உள்ளத்துறுத்தவேண்டுமென்பது இராமன் கருத்து. ஆதலின் இலக்குவன் பார்வையை வாலியின் மேனியின்பால் செலுத்தும் பொருட்டுஇராமன் வியந்தான்போல் உரைத்தவார்த்தைகளாம் இவை. அவன் எண்ணியபடியே,

வள்ளற் கிளையான் பகர்வானிவன் றம்முன் வாணாள்
கொள்ளக் கொடுங்கூற் றுவனைக் கொணர்ந்தான்
[குரங்கி
னெள்ளற்க ரும்போ ரதுசெய்கல னென்னு மின்ன
லுள்ளத்தி னான்றவுணர் வுற்றிலனென் றுமென்றான்

[இராமனை நோக்கி அவன் தம்பி பதிற் சொல்வான்—இந்தச் சுக்கிரீவனானவன் தன்தமையனுடையவாழ்நாளைக் கவர்ந்துகொள்ளும்பொருட்டுக் கொடிய யமனை அழைத்துக்கொண்டு வந்திருக்கின்றான். சாதாரணமாய்க் குரங்குகள் ஒன்றோடொன்று செய்துகொள்கின்ற பழிப்பிற்கு இடமில்லாத போரை இப்பொழுது செய்கின்றானல்லன். இதனை எண்ணும்போது உண்டாகின்ற துன்பம் என் மனதில் ஊன்றவே நான் இப்பொழுது முழுவதும் உணர்வு அழிந்திருக்கின்றேன்—என்றான்]



முகக்குறியினின்றே, தனக்கு இவ்வகை தம்பியால் வாய்க்கும் என இராகவன் எதிர்பார்த்தவண்ணமே நிகழ்ந்தது. "ஏ ஏ, கூற்றுவ, உன் இரையின் மேனி எதனை மானுமென்ன, பார்ப்பதெல்லாம் நீயே பார்; அத்திசை திரும்பிநோக்க என்கண்கள் கூசுகின்றன; என்னுடைய உணர்வும் இப்பொழுது என் வயத்திலில்லை" என்று இலக்குவனால் ஏசப்பெற்ற இராமனது முகத்தில் ஓர் இளநகை பூத்திருக்கும். தன் முழுஉள்ளமுஞ் செலுத்தி ஒருவர் ஒன்றினைச் சொல்லுங்கால் அதனைக் கேட்பவர் மதியாமற் சிரிப்பாராயின், சொன்னவர், அதுகண்டு பின்னும் பதறுவது இயற்கை. ஆதலின் இலக்குவன்,

ஆற்றாது பின்னும் பகர்வா னறத்தா றழுங்கத்
தேற்றாது செய்வார்களைத்தேறுதல் செவ்வி தன்றான்
மாற்றா னெனத்தம் முனைக்கொல்லிய வந்து நின்றான்
வேற்றோர் கடிறத் திவன்றஞ்சமென் வீர வென்றான்.

[மனம்பொறாமல்மீண்டுங்கூறுவான்—தருமநெறியைக் கெடுத்து நம்பத்தகாத காரியத்தைச் செய்கின்றவர்களை நம்புதல் நல்லதன்று. தன்தமையனுக்குப் பகைவனென்று அவனைக் கொல்வதற்கு வந்து நிற்கின்றவொருவன், வீரனே, மற்றவர்களுக்கு என்ன தஞ்சம் அளிக்கக்கூடும், என்றான்.]

"தன் தமையனைக்கொல்வதற்கு வருகின்றான் ஒரு தம்பி. அந்நிகழ்ச்சியை நோக்க ஆற்றலேன்" என்னமுன் தனது தன்மையைத் தெரிவித்த இலக்குவன், "இச்செய்கை செவ்விதன்று" என்ற அந்நிலையிலேயே நின்றிருப்பானாயின் நன்றாம். ஒன்றும் உணர்வுற்றிலனாதலின் ஓர்காரணமுங் கூறப்புகுகின்றான். ஒரு எண்ணத்தின்பெருமையானது, அதற்கென்று கூறப்படும் ஒருகாரணத்தால் எக்காலும், குறைந்துவிடுகின்றது. சிந்தையின் தூய்மையளவு காரணத்தின் உறுதிஎட்டுவதற் கியல்வதில்லை. அன்புடைய தந்தை, மற்றோர் காதல்மிகு மனைவி, நேயம் மிகவுடைய ஒரு நண்பன், உள்ளம் நிறைந்த அடியான், கலைபொலிந்த கவிஞன் அனையோர் தம்முடைய அன்பு காதல் நட்பு பக்தி உவகை முதலியவைகளுக்குக் காரணங்கள் காட்டப் புகுவாராயின், அவர்நிலை தாழ்ந்து தோன்றுந் தன்மையை உன்னினால் உணர்ந்துகொள்ளலாம். இங்கிவ்விலக்குவன் உற்ற கதி அன்னதேயாம். உடன் பிறந்தார் ஒருவரை ஒருவர் கொல்லப்புகுந்த இச்செய்தியை நினைக்கத் தன்னுணர்வு அழிந்ததென்றுரைத்ததோ டமையாமல் இவ்விளவல், "தம்முனைக் கொல்லியவந்து நின்றான் இவன் தஞ்சம் வேற்றோர்கள் திறத்தில் என்னாம்" எனக்காட்டி, இதற்கு இராமன் உடன்படுதல், தெரிந்துசெயல்வகையின்பாற் படாதென்று மறுத்தலால், பயன்படுமேயாயின் இதுவும் நீதியென நினைத்தான்போல்நிகழ்த்திமுடிகின்றான். இத்துணைச் சூழ்ச்சி யாரும் சொல்லிவிடுவார்; உள்ளத் தூய்மையினுயர்ந்தோரே இங்ஙனம் பகரவல்லார் என்பதில்லை. என்னிது! பிற்றைநாள், அடைக்கலம் புகவந்த விபீடணனை ஏற்றுக்கொள்ளல் நேரிதோ அன்றோ என்று இராகவன் உசாவியபோது, தன்முன்னைக் காட்டித் தந்து இராமனைத் துணைபற்றியுள்ள இந்தச் சுக்கிரீவனே, "தம்முனைத் துறந்தது தருமநீதியோ" என்று விளம்பியது மல்லாமல்,

வார்க்குறு வனைகழற் றம்முன் வாழ்நாள்
சீர்க்குற வாயிடைச் செறுநர் சீறிய
போர்க்குற வன்றியே புகுந்த போதிவன்
ஆர்க்குற வாகுவ னருளி னாழியாய்.

[அருளின் கடல்போன்றவனே, வாரினாற்கட்டிய வனைந்த கழல்களை அணிந்த தன் தமையன் வாழ்நாட்களில் அவனது சிறப்புக்களுக்கு உறவாயிருந்து, பிறகு பகைவர் வெகுண்டு எதிர்த்த போரிலும் அவனுக்கு உறவாகஇருக்காமல், நம்மிடம் வந்து தஞ்சம்புகுகின்றான் என்றால், இவன் வேறுயாருக்குத்தான் உண்மைஉறவாகஇருப்பான்.]

என்னவுஞ் சூழ்ந்து சொல்வானெனின், இத்தகையதோர் உபாய காரணம் அதனைக் கூறுவோரை எத்துணைப் பெருமைபடுத்தவல்லதென்பதை மிக எளிதில் ஊகித்துக் கொள்ளலாமே. இளையவள்ளல் இலக்குவன் மிகநல்லன்; சக்கிரீவன் தமக்குத் தளராத தஞ்சமாவானோ அல்லனோ என்னும் ஆராய்ச்சியும் அதன் பயனைக் கொண்டு இச்செய்கையை மதிக்கவேண்டுமென்னு மெண்ணமும் சுமித்திரை புத்திரன் மனத்தில் இப்பொழுது இல்லை. ஆயினும், முதலில் தன் வெறுப்பைச் சிறிது செம்மையின் சினமொடு தெரிவித்ததை மதியாமல் இராமன் நகுகின்ற தன்மையில் நின்றதுகண்டு ஆற்றானாய்த் தன் உணர்வின் தூய்மையை மாத்திரமன்றி மதியின் சூழ்ச்சியையும் வற்புறுத்தப் புக்கதோர் ஆர்வத்தால் இலக்குவன்வாயில் வந்த வாசகங்களாம் இவை.

இலக்குவனது சம்மதத்தைப் பெற்றுக்கொண்டே இராமன் வாலியை வதைக்கப் புறப்பட்டான்என்று வான்மீகர்கூறியதைக் கம்பர் நேரெதிர்மறுத்து இளையவன் இதற்கு ஒவ்வினனல்லனெனக்காட்டுகின்றார். கம்பருடைய கருத்திற்கு இவ்வகையில் இலக்குவன் துணை மிகவும் இன்றியமையாததாக இருக்கின்றது. ஒவ்வாத இவ்விளைஞனைக் கொண்டே இறுதியில், இதன்நீதியை அமைதியுற வாலிக்கு எடுத்துச் சொல்லிவைக்கப் போகின்றார் இப்புலவர். இராமன் வாலியை வதைத்தது நீதியோவென்னும் இதனைச் சோதித்துக் கொள்வதற்கு இலக்குவனது இம்மறுப்புறு வெறுப்புச் சிறந்தவொரு கட்டளைக்கல்லாகவும் அமைகின்றது. இராமன் இதற்கு எதிர்உரைத்த சொற்களும் அன்னதோர் கட்டளைக்கல்லே என்னல் வேண்டும். இது பின்னர்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
ம.ட.ச்யாவனப்ராச — ம.ட.பிருங்காமலக தைலம் — கோரோஜனை மாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-பாக்கேட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) ம.ட.டி.மெடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
ம.ட.ச்யாவனப்ராச. சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
மூலிகைசேர்ந்ததிருமணக்கு எண்ணெய் காஸ்டராலகஸ்
ஜவரேக் — சகல விதமான ஜுரங்களுக்கும்
[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

m241, N28kN
N34-7-30
199180

KALANILAYAM
REG. NO. M. 2324.

## வர்த்தமானம்

பிறந்த குழந்தையின் தீர்க்க தரிசனம்:—புதிதாய்ப் பிறந்த குழந்தை யொன்றின் அற்புதமான செயல் மெக்ஸிக்கோ மக்களைப் பிரமிக்கச் செய்துவிட்டது. அக்குழந்தை பிறந்த சிறிதுநேரத்திற்குள் டாக்டரைக் கூப்பிட்டுத் தெளிவான ஸ்பானிய பாஷையில் "ஆறு மாத காலம்வரை இடைவிடாமல் ஆபத்துக்கள் தோன்றப் போகின்றன. அவ்வாபத்துக்களுள் நீங்கள் பூகம்பத்தை விரும்புகின்றீர்களா? அல்லது சூறைக் காற்றை விரும்புகின்றீர்களா?" என்று கேட்டதாம். 'பூகம்பங்கள் தான்' என்று டாக்டர் விடைகொடுத்தாராம். "ஆனல் அப்படியே யாகட்டும்" என்று அக் குழந்தை கூறிவிட்டு உடனே இறந்துபோய்விட்டதாம். அந்தக் குழந்தை கூறிய தீர்க்க தரிசனத்தைக் கேட்ட ஆயிரக் கணக்கான மக்கள் பயத்தால் நடு நடுங்கிப்போய் நீண்ட நேரம் வரை இறைவனைப் பிரார்த்தித்துக்கொண்டு நின்றிருந்தனர். இதன் பயன் மக்களிடை மிகவும் பயங்கரத்தைக் கிளப்பிவிட்டிருக்கிற படியால். அதிகாரிகள் இக்கதையினை மகா நுணுக்கமாக விசாரித்தறிந்து வருகின்றனர்.

* * *

மோட்டார் வெறுப்பு:—மோட்டார் வண்டிகளுக்குப் பிறப்பிடமான அமெரிக்க ஐக்யநாட்டில் ஆண்டி மோட்டார் கார் லீக் என்று ஒரு சங்கம் ஏற்பட்டிருக்கிறது. மோட்டார் வண்டிகளை ஒழிக்கவேண்டும் என்பது அதன் கருத்தாம்.

* * *

சத்த வேட்டை:—லண்டனில் சத்தத் தடைச்சங்கத்தைச் சேர்ந்த ஒருவர் அநாவசிய சத்தங்களை நிறுத்துவதற்கென ஏற்படுத்தப்பட்டிருக்கின்றாராம். இச் சங்கத்தின் முயற்சியினால் லண்டனில் ஆண்டி நாயிஸ் லீக் என்றபேரோடு ஒரு சங்கம் ஏற்பட்டிருக்கிறது. பலவகை வண்டிகளாலும் யந்திரங்களாலும் எழும் இரைச்சலைக் குறைப்பது இதன் நோக்கம்.

* * *

பூமியில் வெந்நீர்:—பிரபல ருஷ்ய விஞ்ஞான சாஸ்த்திரிகளில் ஒருவர் நவீன இயந்திரக் கருவிகளின் உதவிகொண்டு 3900 அடி ஆழத்திற்குப் பூமியில்தோண்டி அங்கிருந்து சூடான தண்ணீரைக் குழாய்கள் மூலம் மாஸ்கோநகரத்தின் வீடுகள் அனைத்திற்கும் கொண்டு போகலாமென்று கூறினர்.

* * *

முத்தத்திற்குத் தடை:—இத்தாலி தேசத்தில் பொது இடங்களில் கணவர்கள் மனைவிமாரை முத்தமிடக் கூடாதாம். இரயில்வே ஸ்டேஷன்களில் கணவனே மனைவியோ பிரிவதாயிருந்தால் முத்தமிட்டுக்கொள்ளலாமாம். பொது விடங்களில் முத்தமிட்டால் குறைந்தது 3 ஷிலிங் அபராதம் வசூலித்து விடுகின்றார்களாய்.

* * *

வேலை தேடிக்கொண்ட வாலிபன்:—யென்சில் வேனியாவைச் சேர்ந்த இண்டியானு என்ற விடத்தில் ஒரு வாலிபன் ஒரு சங்கத்தில் தனக்கு வேலை தரும்படி கேட்டானும். அச்சங்கத்தார் குடும்பத்தோடு வசிக்கும் கலியாணமானவர்களுக்குத் தான் வேலை அகப்படுமென்று சொல்லிவிட்டார்களாம். வாலிபன் அதைரிய மடையாமல் சிறிது நேரத்தில் வருகின்றேனென்று சொல்லிப் போய்விட்டானும். சிறிது நேரங் கழித்து மூச்சுத் திணர ஓடி வந்து தனக்கு இரண்டு குழந்தைகளும் ஒரு மனைவியுமிருப்பதாய்த் தெரிவித்தானும். அவன் அப்பொழுதுதான் ஒரு விதவையை மணந்து கொண்டதாகக் கூறினனும். உடனே வாலிபனுக்கு வேலையுங் கிடைத்தாம்.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.

1933 Results.

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000

The Company with a steady progress all round.
All forms of life assurance policies issued at low safe rates of premium.

Specialities.

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR B. G. DAS & Co., Managers.

Consult
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
for Fire, Motor & Accident policies.

A sound Company.
Please apply for particulars to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR B. G. DAS & Co., Managers.

யுனைடெட் இந்தியா
லைப் அஷ்யுரன்ஸ் கம்பெனி, லிமிடெட், சென்னை.
ஹெட் ஆபீஸ்:—சென்னை. 1906ல் ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியாவில், லைப் இன்ஷுயரன்ஸின் சிறந்த பயன்கள் குறைந்தசெலவில் கிடைக்கும்.
யுனைடெட் இந்தியாவில் பாலிஸி எடுத்துக்கொள்வது மிகச்சிறந்தஇன்வெஸ்ட்மெண்டும், வயது காலத்திற்கும் குடும்பத்திற்கும் இணையற்ற ஆதரவும் ஆகும்.
யுனைடெட் இந்தியாவே, தென்னிந்தியாவில் மற்றெல்லாக் கம்பெனிகளுக்கும் முன்னால் ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியா முற்றிலும் பத்திரமானதும் கெட்டிதிட்ட முடையதும் ஆன கம்பனி.
ஹெட் ஆபீஸ்:— செம்புதாஸ் தெரு, சென்னை. அல்லது இந்தியா, பர்மா, ஸிலோனில் உள்ள பிராஞ்சுகள்
இவைகளுக்கு எழுதி முழு விவரமும் இது பற்றிய பிரசுரங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியா தேசத்து இணையற்ற இரத்தினம்
ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்
தேக பலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் நிகரற்ற ஔஷதம். சென்ற 53வருஷங்களாக இலட்சக்கணக்கான ஜனங்களால் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.
32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1
இனும்! இனும்!!
"இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி"
இனமாகவும் தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)